3 விதமான உபதேசங்கள்

திரு. சாலமோன்

3
விதமான
உபதேசங்கள்

திரு. சாலமோன்

கிறிஸ்துவின் வார்த்தை நூல் நிலையம்
சென்னை, இந்தியா.

மூன்று விதமான உபதேசங்கள்

Three Types of Doctrines *by* Bro. Solomon

Copyright © 2013 Solomon
Mobile: 9025634257
E-mail: s_solomon54@yahoo.com

ISBN : 978-81-937504-0-7
First Edition - 2013

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means-electronic, mechanical, photocopying, recording, or otherwise-without the prior written permission of the publisher. The only exception is brief quotations in printed reviews.

Published by:
WORD OF CHRIST MINISTRIES
No. 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road, Kellys
Chennai 600 010 Tamil Nadu, India
Phone: 044-2661 3242/ 4264 0111
E-mail: christianliterature@gmail.com
www.wordofchrist.org.in

Price: Rs. 40.00

சமர்ப்பணம்

சிறுவயதிலிருந்தே மனநிலை பாதிக்கப்பட்டிருந்த என் மனைவி **Smitha Solomon** கடந்த பத்து ஆண்டுகளாக என்னுடன் வாழ்ந்து, ஊழியப் பாதையில் நான் அனுபவித்த துன்பங்கள், அவமானங்கள் போன்ற எல்லாவற்றிலும் என்னுடன் இணைந்து பங்கு பெற்று, தனது முப்பதாவது வயதில் கடந்த 13-04-2011 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். என் மனைவியின் நினைவாக இந்நூலை சமர்ப்பிக்கிறேன்.

பொருளடக்கம்

பகுதி - 1

கிறிஸ்துவின் உபதேசம்

பகுதி - 2

பிசாசின் உபதேசங்கள்

பகுதி - 3

மனிதர்களின் உபதேசங்கள்

முகவுரை

உபதேசம் என்பது மனித வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகும். சிறியோர் முதல் பெரியோர் வரை உபதேசத்தைக் கேட்கவேண்டியுள்ளது. மனிதனுடைய அறிவு மிகவும் குறைவாக இருப்பதனால் (1 கொரி. 13:9a), நாம் மரிக்கும்வரை உபதேசம் நமக்குத் தேவையாக உள்ளது. மனிதர்கள் பலவிதமான துறைகளில் மிகவும் தேறினவர்களாக இருக்கலாம். ஆனால், சில நேரங்களில் மிகப்பெரிய அறிவாளிகளும் தவறுவதுண்டு. இதற்குக் காரணம் என்ன? நாம் அனைவரும் குறிப்பிட்ட காரியங்களில் மட்டுமே வெவ்வேறான விதத்திலான அறிவைப் பெற்றிருப்பினும் எல்லாக் காரியங்களிலும் தேறினவர்கள் அல்ல.

எவ்வளவு பெரிய நிலையில் உள்ள மனிதனாக இருப்பினும் சில நேரங்களில் சில காரியங்களில் அவர்களுக்கு மற்றவர்களின் உபதேசமானது தேவைப்படுகிறது. சிலர் மற்றவர்களது உபதேசத்தைக் கேளாமல் மிகப்பெரிய தவறுகளைச் செய்து மாட்டிக்கொள்வதுண்டு (நீதி. 5:11-14). ஆபத்தில் சிக்கிக்கொண்டபின்பு உபதேசம் உதவாது. ஆபத்து வருவதற்கு முன்பே உபதேசத்தைக் கேட்பது நல்லது. உபதேசமானது உலகத்தோற்றமுதலே இருந்துவருகிறது. ஆனால், ஆதிமனிதனாகிய ஆதாம் விழுந்துபோகக் காரணமே உபதேசத்தை மறந்ததினால்தான். தேவன் கொடுத்த உபதேசத்தை மீறி பிசாசின் உபதேசத்தைக் கேட்டான். அதாவது, ஏவாளின் மூலமாகத் தானும் வஞ்சிக்கப்பட்டான்.

உலகத்தில் எத்தனையோ விதமான உபதேசங்கள் உள்ளன. ஆனால், அவைகளில் தேவனுடைய உபதேசமானது மிகவும் முக்கியமானதாகும். அதற்கு அடுத்தபடியான உபதேசமானது

பிசாசின் உபதேசமாகும். தேவனுடைய உபதேசமானது மனிதனை நல்வழிப்படுத்தும். பிசாசின் உபதேசமானது மனிதனைக் கெடுப்பதற்காக வருகிறது. பல தந்திரமான உபதேசங்களைப் பிசாசு கொண்டுவருவான். தேவனுடைய உபதேசமானது கடுமையானதாகத் தோன்றும் ஆனால் அதன் முடிவானது ஆசீர்வாதத்தையும் சந்தோஷத்தையும் கொண்டுவரும். பிசாசின் உபதேசமானது இனிமையாகத் தோன்றும் ஆனால் அதன் முடிவானது ஆபத்திலும் துக்கத்திலும் கொண்டுசேர்க்கும்.

அதற்கு அடுத்தப்படியான உபதேசமானது மனிதர்களின் உபதேசமாகும். சில மனிதர்கள் நலமானதை மட்டுமே உபதேசிப்பார்கள். சில மனிதர்களின் உபதேசமானது கெட்டதை மட்டுமே செய்வதற்கான உபதேசமாகும். தேவனுடைய உபதேசமானது நன்மை மட்டுமே செய்யும். பிசாசின் உபதேசமானது தீமையை மட்டுமே செய்யும். இவைகளை சுலபமாக அடையாளம் காணலாம். ஆனால், மனிதர்களின் உபதேசங்களை அடையாளம் காண்பது மிகவும் கடினமான ஒன்றாகும். காரணம் அவர்களது உபதேசமானது நன்மைக்காகவா அல்லது தீமைக்காகவா என்பதை அடையாளம் காண்பது மிகவும் கடினமான ஒன்றாகும். நல்ல உபதேசம் கூறுவதுபோலக் கூறி மற்றவர்களைப் பெரிய ஆபத்தில் சிக்கவைக்கும் மனிதர்களும் உண்டு.

ஆகவே, இந்த பூமியில் காணப்படும் உபதேசங்களைக் கிறிஸ்துவின் உபதேசம், பிசாசின் உபதேசம், மனிதனின் உபதேசம் என மூன்று வகையாகப் பிரித்து அவைகளைத் தெளிவாக அடையாளம் காணவேண்டும். அப்படி செய்வதனால் மட்டுமே தவறான உபதேசங்களிலிருந்து விசுவாசிகள் தங்களைக் காத்துக்கொள்ள முடியும். தேவனுடைய உபதேசத்தை சரியாகக் கற்றுக்கொள்ளாமல், சுலபமான உபதேசங்களை விரும்பி பிசாசு மற்றும் மனிதர்களின் தவறான உபதேசங்களுக்கு இடங்கொடுத்த அநேக ஊழியர்களும் விசுவாசிகளும் கிறிஸ்தவத்தில் உள்ளனர். தாங்களும் தவறான உபதேசத்திற்கு அடிமைகளாக மாறி

மற்றவர்களையும் விழச்செய்பவர்கள் இன்று ஏராளம். தேவனுடைய உபதேசத்தை விட்டுவிலகி பிசாசின் உபதேசங்களுக்கு செவிகொடுக்கும் மனிதர்களே இன்று ஏராளம் (1 தீமோ. 4:1; 2 தீமோ. 4:3-4).

வேதம் கூறுகிறதான மூன்றுவித உபதேசங்களாகிய கிறிஸ்துவின் உபதேசம் (2 யோவான். 1:9), பிசாசின் உபதேசங்கள் (1 தீமோ. 4:1), மனிதர்களின் உபதேசங்கள் (மத். 15:9) ஆகியவைகளைத் தெளிவாக அடையாளம் கண்டு, கிறிஸ்துவினுடைய உபதேசத்தை மட்டுமே ஆவிக்குறிய வாழ்வில் கைக்கொள்ளும்படியான தெளிவை இந்நூல் விசுவாசிகளிலும் ஊழியர்களிலும் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையுடனும் ஜெபத்துடனும் சமர்ப்பிக்கிறேன். மிகவும் கவனமாக வாசித்துப் பயனடையுங்கள்.

கிறிஸ்துவின் பணியில்,
சாலமோன்

பகுதி - 1

கிறிஸ்துவின் உபதேசம்

அதிகாரம் - 1

மனந்திரும்புதல்

கிறிஸ்துவின் உபதேசமானது "மனந்திரும்புங்கள்" என்று ஆரம்பமானது (மத். 4:17). அவருடைய உண்மையான சீஷர்களின் உபதேசமும் அப்படியே ஆரம்பமானது (மத். 3:2; அப். 2:38; 17:30). பாவத்தில் விழுந்த மனிதன் மனந்திரும்பி தேவனிடம் வரவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகும் (லூக். 24:47). இயேசு இந்த உலகிற்கு வந்ததன் நோக்கம் மனிதர்களை மனந்திரும்புதலுக்கு அழைக்கும்படியாகத்தான் (லூக். 5:32). மனந்திரும்புதலையே இயேசு முக்கியப்படுத்திப் பேசினார். தேவனுடைய உறவைவிட்டு விலகிப் பாவ வழியில் போன மனிதர்கள் தேவனிடம் திரும்ப வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகும் (ஓசி. 6:1; 12:6a).

"மனந்திரும்புதல்" என்பது ஒருவன் தான் செய்த தவறுகளை உணர்ந்து, அதற்காக மனம்வருந்தி, தனது தவறுகளைவிட்டு விலகி மறுபடியும் தவறு செய்யாதபடிக்குப் புதிய வழியைத் தெரிந்துகொள்ளுதல் ஆகும். தேவனை விட்டுவிலகி சொந்த வழியில் போன மனிதர்கள் தங்களது பாவங்களை உணர்ந்து அறிக்கை செய்து தேவனிடம் திரும்பவேண்டும் என்பதுதான் இயேசு போதித்த மனந்திரும்புதலாகும் (மத். 3:5-6). உண்மையான மனந்திரும்புதல் இல்லாமல் தேவனிடம் (பரலோகம்) செல்ல இயலாது (ஓசி. 11:5; லூக். 13:3,5). யூதராயினும் புறஜாதியாராயினும் உண்மையான மனந்திரும்புதலுக்கு வரவேண்டும் (அப். 11:18).

மனந்திரும்புதல் என்பது தற்காலிகமான வருத்தமாயிராமல் நித்திய ஜீவனுக்கு ஏதுவானதாக இருக்கவேண்டும் (அப். 11:18). இஸ்ரவேலர் பலமுறை தங்களது தவறுகளுக்காக மனம் வருந்தி மறுபடியும் மறுபடியுமாக தேவனைவிட்டுப் பின்வாங்கிப் போனார்கள். இது உண்மையான மனதிரும்புதல் அல்ல. ஒருமுறை தேவனிடம் மனந்திரும்பினால் அவரில் நிலைத்திருப்பதே உண்மையான மனந்திரும்புதல் ஆகும். ஏதோ ஒரு காரணத்திற்காக இயேசுவின் உதவியை நாடி வருபவர்கள் மனந்திரும்புகிறவர்கள் அல்ல. ஜெபம் மட்டுமே எனக்குப் போதும் எனக் கூறி வருபவர்கள் ஏராளம் உண்டு. அப்படிப்பட்டவர்கள் ஜெப உதவியைப் பெற்று தேவனுடனான உறவையோ அசட்டைபண்ணி வாழ்வார்கள்.

கிறிஸ்துவின் உபதேசமானது உண்மையான மனந்திரும்புதலை வலியுறுத்துகிறது. மனந்திரும்பாமலேயே பரிசுத்தஆவியானவரின் வரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பிய மாயவித்தைக்காரனாகிய சீமோன் என்பவன் பேதுருவினால் கடிந்து கொள்ளப் பட்டானல்லவா? (அப். 8:18-22). மனந்திரும்பாமல் தேவனுடைய ஆசீர்வாதங்களை மட்டுமே பெற்றுக்கொள்வது கிறிஸ்துவின் உபதேசமல்ல. உண்மையான மனந்திரும்புதலை அடைகிறவர்கள் மட்டுமே தேவனுடைய பிள்ளைகளாக மாறி பரலோகம் செல்லமுடியும். மனந்திரும்புதலை வலியுறுத்தாத உபதேசமானது கிறிஸ்துவின் உபதேசமல்ல.

* * *

அதிகாரம் 2

மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுத்தல்

மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்.
(மத். 3:8)

மனந்திரும்புதலைத் தொடர்ந்து அதற்கேற்ற கனிகள் காணப்படவேண்டும். மனந்திரும்பிவிட்டேன் எனக் கூறிவிட்டு பழைய வாழ்க்கையையும் அதன் கிரியைகளையும் தொடர்ந்து செய்தால் அது உண்மையான மனந்திரும்புதல் அல்ல. மனந்திரும்புதல் என்றால் புதிய வாழ்வை ஆரம்பித்து புதிய வழியில் செல்வதையும் குறிக்கிறது. மனந்திரும்பியவர்களின் வார்த்தை, செயல்கள், சிந்தனைகள் போன்றவற்றில் மாற்றம் காணப்படவேண்டும். மனந்திரும்பினேன் எனக் கூறுவது எளிதான ஒன்று. ஆனால் அதை செயலில் காட்டுவது மிகவும் கடினமான ஒன்று.

மனந்திரும்பியவர்களை அவர்களது வெளித்தோற்றத்தின்படி அடையாளம் காண்பதைவிட அவர்களுக்கு உள்ளாக இருந்து வெளிப்படும் கனிகளினால் அறியலாம் (மத். 7:16a). அவர்களது பழைய வாழ்க்கையின் கனிகள் அனைத்தும் மறைந்து (கலா. 5:19-21) புதிய கனிகள் வெளிப்படும் (கலா. 5:22-23). மனந்திரும்புவதற்கு முன்பு அவர்களில் காணப்பட்ட அனைத்துமே ஒழிந்துபோம் (2 கொரி. 5:17). மனந்திரும்புதலைத் தொடர்ந்து வருகிறதான கனிகளை இயேசு விசுவாசிகளில் எதிர்பார்க்கிறார் (யோவான். 15:1-8). உண்மையாக மனந்திரும்பினவர்கள் நல்ல கனிகளைக் கொடுக்கும்படி இயேசு அவர்களை சுத்தம்பண்ணுகிறார் (யோவான். 15:2).

மனந்திரும்பியவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டவர்களாவர். அப்படிப்பட்டவர்கள் நல்ல கனிகளாகிய கிரியைகளைச் செய்யும்படியாகவே மறுபடியும் பிறந்துள்ளனர் (எபே. 2:10). உண்மையாக இரட்சிக்கப்பட்டவர்கள் கனிகொடுக்கவேண்டும் என்பது தேவனுடைய எதிர்பார்ப்பும் கட்டளையுமாகும். உண்மையாக மனந்திரும்பியவர்களில் நல்ல கனிகளை விளையச் செய்கிறவரும் கிறிஸ்துவே ஆவார். நல்ல கனிகளாகிய கிரியைகளை விசுவாசியில் ஆரம்பிப்பவரும் அவரல்லவா? (பிலி. 1:5). நல்ல கனிகளைக் கொடுக்கும்படியான விருப்பத்தையும் அவரே தருகிறார் (பிலி. 2:13). அப்படிப்பட்ட கனிகளை இறுதிவரைக் கொடுக்கும்படி விசுவாசிகளுக்கு உதவுகிறார் (எபி. 13:21).

உண்மையாக மனந்திரும்பியவர்கள் கனி கொடுத்தே ஆகவேண்டும். மனந்திரும்பிய பின்பும் கனியற்ற வாழ்க்கை இருக்குமேயானால் அப்படிப்பட்ட மனந்திரும்புதல் உண்மையானதா என்ற சந்தேகம் எழும். காரணம், கனி கொடுக்காதவர்கள் அக்கினியில் போடப்படுவார்கள் (மத். 3:10). ஆகவே, நமது கனிகளை வைத்தே நமது உண்மையான மனந்திரும்புதலையும் தீர்மானிக்கலாம். மனந்திரும்பிவிட்டேன் ஆனால் கனி கொடுக்கவிருப்பமில்லை எனக் கூறக்கூடாது. அது கிறிஸ்துவின் உபதேசம் அல்ல. கிறிஸ்துவின் உபதேசமானது கனிகொடுக்கச் செய்யும். உண்மையான மனந்திரும்புதல் கனிகளின் மூலமாக வெளிப்படவேண்டும் என்பது கிறிஸ்துவின் கண்டிப்பான கட்டளையும் எதிர்ப்பார்ப்பும் ஆகும் (வெளி. 2:5).

உண்மையாக மனந்திரும்பியவர்கள் நல்ல கனிகளைக் கொடுக்கும்படி எதையும் விட்டுவிடத் தயாராக இருப்பார்கள். மனந்திரும்புதலுக்கு முன்பு தவறான வழிகளில் அதிகமான இலாபம் தந்த எந்த தொழிலையும் விட்டுவிடுவார்கள் (அப். 19:18-19). தவறான வழியில் வருகிறதான அதிகமான இலாபத்தைவிட நீதியின் வழியில் வருகிறதான கொஞ்ச இலாபத்தைப் போதுமென எண்ணி தேவனுக்கென நல்ல கனிகளாகிய கிரியைகளைக் கொடுப்பார்கள்

(லூக். 19:8-9). அவர்களது கனிகளைக் காணும் மற்றவர்கள் தேவனை மகிமைப்படுத்துவார்கள் (மத். 5:16).

ஆகவே, மனந்திரும்புதலின் அடையாளமாக நல்ல கனிகள் காணப்படவேண்டும் என்பது கிறிஸ்துவின் உபதேசமாகும். ஒருவேளை உண்மையான விசுவாசிகளின் வாழ்வில் கெட்ட கனிகள் காணப்படுமேயாகில் அவர்கள் அந்தக் கனிகளைவிட்டு விலகி நல்ல கனிகளைக் கொடுக்கவேண்டும் (எபே. 5:11). ஆனால், தேவன் என்னை வெறுக்கிறார் என எண்ணி பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு மறுபடியும் மறுபடியுமாக கெட்ட கனிகளைக் கொடுக்கக்கூடாது. நல்ல கனிகளைக் கொடுக்கும் விசுவாசிகளுக்கு பரலோகத்திலும் இந்த பூமியிலும் பெரிய பிரதிபலன் உண்டு என்பதை மறக்கக் கூடாது (மத். 25:34-40; 2 கொரி. 5:10; வெளி. 22:12).

இரட்சிக்கப்பட்டுவிட்டேன், மனந்திரும்பிவிட்டேன் எனக் கூறி அப்படியே இருப்பதற்காக இயேசு யாரையும் இரட்சிக்கவில்லை. ஆதாமை சிருஷ்டித்தபோதே அவன் கிரியை செய்யும்படி கட்டளையிட்டார் (ஆதி. 2:15). இரட்சிக்கப்பட்ட மனிதர்களை உடனடியாக பரலோகத்திற்கு எடுத்துகொள்ளாமல் இந்த பூமியிலேயே வைத்திருப்பதன் நோக்கமென்ன? அவர்கள் கனி கொடுக்கும்படியாகவே வைக்கப்பட்டுள்ளனர் (எபே. 2:10; தீத்து. 2:7,14; 3:1,8,14). உண்மையாக மனந்திரும்பியவர்களில் கனி காணப்படவேண்டும் என்பது கிறிஸ்துவின் உபதேசமாகும்.

* * *

அதிகாரம் 3

கிறிஸ்துவின் உபதேசத்தின் இயல்புகள்

அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. 2 தீமோ. 3:17

அவைகள் உபதேசத்திற்கும்

கிறிஸ்துவின் உபதேசமானது மனிதர்களைப் பூரணமுள்ளவர்களாக மாற்றும். உபதேசம் என்பது ஒரு மனிதனில் அறிவை உண்டாக்குகிற ஒன்றாகும். தேவனையும் அவரை அறிகிற அறிவையும் விசுவாசிகளில் உருவாக்கும் (யோவான். 17:3). தேவனை நன்றாக அறிந்து அவருடைய சித்தம் செய்யவும் நமக்காக தேவன் வைத்துள்ள ஆசீர்வாதங்களை அறிந்துகொள்ளவுமே வேத வசனங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. விசுவாசிகள் ஒவ்வொருநாளும் தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து அவருடைய உபதேசங்களில் நிலைத்திருக்கும்படியாகவே தேவன் விரும்புகிறார் (கொலோ. 1:9-10).

அவருடைய உபதேசமானது அனுதினமும் நம்மை நடத்தவேண்டும். கிறிஸ்துவின் உபதேசமானது வசனத்தின் மூலமாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வசனங்களே நம்மை சரியான உபதேசத்திற்குள் வழிநடத்தவேண்டும் (சங். 32:8; 119:11). கிறிஸ்துவின் உபதேசத்தில் நாம் நடக்கவேண்டுமானால் அவருடைய வசனங்களை நன்றாக அறிந்திருத்தல் அவசியமாகும். வசனங்களை அறியாதவர்களை

கிறிஸ்துவின் உபதேசம் நடத்துவதில்லை. ஒருவன் தேவனில் வளர்ந்து கனி கொடுக்க வேண்டுமெனில் கிறிஸ்துவின் உபதேசமாகிய வசனத்தில் வளரவேண்டும். இல்லையேல் அவனால் கனிகொடுக்கவோ வளரவோ இயலாது. கிறிஸ்துவின் வசனம் இல்லாத உபதேசமானது பெலனற்றதாக இருக்கும்.

கடிந்துகொள்ளுதலுக்கும்

கிறிஸ்துவின் உபதேசமானது கடிந்துகொள்ளுதல் உள்ளதாகக் காணப்படும். காரணம், உண்மையான உபதேசத்தில் கடிந்துகொள்ளுதல் காணப்படும் (எபி. 12:5-8). கடிந்துகொள்ளுதல் என்பது உண்மையான அன்பை வெளிப்படுத்துகிறதல்லவா? உலகத்தில் எத்தனையோ விதமான உபதேசங்கள் உண்டு. அவைகளில் பெரும்பாலானவைகளில் கண்டிப்பு இருப்பதில்லை. காரணம், உண்மையான அன்புடன் கடிந்துகொண்டு உபதேசிப்பவர்களை உலகம் வெறுக்கிறது. கண்டிப்பு இல்லாமல் முகஸ்துதி செய்பவர்களை உலகம் நேசிக்கிறது.

கிறிஸ்துவின் உபதேசமானது கண்டிப்பு உள்ளதாகவே உள்ளது. காரணம், அவர் தமது ஜனத்தை உண்மையாக நேசிக்கிறார். ஆறுதல்படுத்தவேண்டிய இடத்தில் ஆறுதல்படுத்தி கண்டிக்கவேண்டிய இடத்தில் கண்டிப்பதுதான் கிறிஸ்துவின் உபதேசமாகும். பாவஞ்செய்யும்போது முகதாட்சணியம் இல்லாமல் கண்டிப்பதுதான் கிறிஸ்துவின் உபதேசமாகும். பணவசதியுள்ள விசுவாசிகளை ஒருவிதமாகவும் ஏழை விசுவாசிகளை மற்றொரு விதமாகவும் கண்டிப்பது கிறிஸ்துவின் உபதேசமல்ல. எல்லாரையும் ஒரேமாதிரியாக உபதேசிப்பதுதான் கிறிஸ்துவின் உபதேசமாகும். பேதுருவை உற்சாகப்படுத்திய இயேசு (மத். 16:17-18) அவனைக் கடிந்துகொண்டாரல்லவா? (மத். 16:23).

கிறிஸ்துவின் உபதேசமானது அன்பின் அடிப்படையில் அமைந்துள்ளபடியால், கடிந்துகொள்ளுதல் காணப்படும். எவ்வளவு பெரிய விசுவாசியாக இருப்பினும், தவறு செய்தால் கிறிஸ்துவின்

உபதேசமானது அவர்களைக் கடிந்துகொள்ளும். கிறிஸ்துவின் உபதேசத்தில் பட்சபாதமில்லை. வெறும் ஆறுதலான வசனங்களை மட்டுமே பேசுவது கிறிஸ்துவின் உபதேசமல்ல. ஏழு சபைகளுக்கான செய்திகளில் கிறிஸ்து சபைகளைக் கடிந்துகொண்டாரல்லவா? (வெளி. 2:4-5; 16,22-23; 3:1-3; 14-18). ஆகவே, கிறிஸ்துவின் உபதேசமானது கடிந்துகொள்ளுதல் உள்ளதாகவே காணப்படும். கடிந்துகொள்ளுதல் இல்லாத உபதேசமானது கிறிஸ்துவின் உபதேசமல்ல.

சீர்திருத்தலுக்கும்

சீர்திருத்தம் என்பது மனிதனுடைய வாழ்வில் மிகவும் முக்கியமான ஒன்றாகும். மெய்யானதும் சரியானதுமான பாதையைவிட்டு மனிதன் விலகும்போது அவனுக்கு சீர்திருத்தம் தேவைப்படுகிறது. சுய நீதியை சார்ந்துகொண்டு சொந்தமான பாதையில் நடந்து தேவனுடைய ஆலோசனைகளைப் புறக்கணிப்பவர்களுக்கு சீர்திருத்தம் தேவை. அதுபோலவே, சரியான உபதேசத்தை விட்டு தவறான உபதேசத்திற்கு செல்பவர்களுக்கும் சீர்திருத்தம் தேவை.

பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டிருந்த மோசேயின் நியாயப்பிரமாணங்களில் சீர்திருத்தத்தை இயேசு கொண்டுவந்தார். மோசேயின் நியாயப்பிரமாணங்களை தவறான விதங்களில் கையாண்டு தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றாமல், தங்களது நோக்கங்களுக்காக அவைகளை யூதர்கள் கையாண்டுவந்தார்கள். ஆனால், இயேசு வந்தபோது நியாயப்பிரமாண விஷயத்தில் பெரிய சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார் (மத். 5-7 வரையிலான அதிகாரங்கள்). இயேசுவின் சீர்திருத்தங்களை ஏற்றுகொள்ளாத யூதர்கள் அவரை எதிர்த்தார்கள்.

இன்றைய சபைகளிலும் இயேசுவின் வசனங்கள் தவறான விதங்களில் கையாளப்படுகின்றன. அப்படிப்பட்ட இடங்களில் கிறிஸ்துவின் போதனையான சீர்திருத்தம் மிகவும் அவசியமாக

உள்ளது. ஆனால், ஆவிக்குரிய சீர்திருத்தத்தை அநேகமான போதகர்களும், விசுவாசிகளும் ஏற்றுக்கொள்வதில்லை. தங்களுக்கு சாதகமாக வேத வசனங்களை மாற்றிக்கொள்வதும், எனக்கு எல்லா சத்தியங்களும் தெரியும் என எண்ணுவதுமே இதற்கான காரணமாகும். பல விசுவாசிகளும் ஊழியர்களும் கிறிஸ்துவின் சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ளாமல் தவறான உபதேசங்களில் பிடிபட்டிருப்பதை நம்மால் காணமுடிகிறதல்லவா?

மட்டுமல்லாது, ஆவிக்குறிய வாழ்வில் பெலனடையாமல் பின்வாங்கிப்போனவர்களும் உண்டு. இரகசியமான பாவங்களில் வாழ்பவர்களும் உண்டு. அப்பபடிப்பட்ட விசுவாசிகளையும், தவறான உபதேசங்களை நாடிச் சென்ற ஊழியர்களையும் மறுபடியும் சத்தியத்திற்குள் கொண்டுவர சீர்திருத்தம் அவசியமல்லாவா? (கலா. 6:1). வழிதப்பிப் போனவர்களை மறுபடியும் தேவனுக்குள் கொண்டுவருவதற்கும், சத்தியத்தைவிட்டு விலகினவர்களை மறுபடியும் சரியான சத்தியத்திற்குள் கொண்டுவருவதற்கும் கிறிஸ்துவின் சீர்திருத்தம் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

நீதியைப் படிப்பிக்குதலுக்கும்

கிறிஸ்துவின் உபதேசமானது நீதியையும் படிப்பிக்கும். இயேசுவின்மேல் வைக்கிறதான விசுவாசத்தின் மூலமாக மட்டுமே வருகிறதான தேவநீதியையும் (ரோம. 5:1), விசுவாச வாழ்வில் அனுதினமும் கடைப்பிடிக்கவேண்டிய நீதியையும் கிறிஸ்துவின் உபதேசம் படிப்பிக்கும். கிறிஸ்துவின் வசனங்களை தியானிக்காதவர்களும் விரும்பி வாசிக்காதவர்களும் கிறிஸ்துவினால் நடத்தப்படுவது கூடாத காரியமாகும். கிறிஸ்துவின் வசனங்களை விட்டுவிட்டு பரிசுத்தஆவியானவர் சகல நீதிக்குள்ளும் வழிநடத்துவார் என எண்ணி வஞ்சிக்கப்படக் கூடாது.

பரிசுத்தஆவியானவர் விசுவாசியைப் படிப்பிப்பார் என்பது உண்மைதான் (யோவான். 16:8-11). ஆனால், அந்த

ஆவியானவரே சுயமாகப் பேசாமல் பிதாவினிடம் கேட்டவைகளைக் கொண்டே போதிப்பார் (யோவான். 16:13-14). வேதவசனங்கள் எல்லாமே தேவ ஆவியினால் அருளப்பட்டுள்ளது (2 தீமோ. 3:16). அவைகளைப் பரிசுத்தஆவியானவர் மூலமாக தேவன் கொடுத்துள்ளார். இயேசு பேசினவைகளை நினைவுபடுத்தி பரிசுத்தஆவியானவர் போதிப்பார் (யோவான். 16:14). வேதத்தின் சகல வசனங்களும் தேவனிடமிருந்து வந்து (பிர. 12:11b) பரிசுத்தஆவியானவர் மூலமாகக் கொடுக்கப்பட்டுள்ளது (2 தீமோ. 3:16; 2 பேது. 1:20-21).

விசுவாசி நீதியைக் கற்றுக்கொள்ளவேண்டுமெனில் பரிசுத்தஆவியானவரின் உதவியுடன் வேதவசனங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். அப்பொழுது மட்டுமே கிறிஸ்துவின் நீதியைக் கற்றுக்கொள்ள முடியும். கிறிஸ்துவின் வசனமானது விசுவாசிக்குள் பரிபூரணமாக வாசமாயிருக்கும்போது (கொலோ. 3:16) அந்த வசனங்கள் அவர்களை நீதிக்குள்ளாக வழிநடத்தும். ஆகவே, விசுவாசியை சகல நீதிக்குள்ளாகவும் நடத்தும்படி கிறிஸ்துவின் உபதேசமானது உதவிசெய்கிறது.

நீதியைப் படிப்பிக்காத உபதேசமானது தேவனால் உண்டான உபதேசமல்ல. எவ்வளவு பெரிய பணவசதியும் கல்வியும் உடைய விசுவாசியாக இருப்பினும், தவறு செய்யும்போது கடிந்துகொண்டு நீதியைப் படிப்பிப்பதுதான் கிறிஸ்துவின் உபதேசமாகும். கிறிஸ்துவின் உபதேசத்தில் பட்சபாதமில்லை (மத். 22:16).

* * *

அதிகாரம் 4

நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு. தீத்து. 2:1

கிறிஸ்துவின் உபதேசமானது ஆரோக்கியமான ஒன்றாகும். இயேசு இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களில், மனிதர்களைக் கண்டு மனதுருகி அற்புதங்கள் செய்தது உண்மை. ஆனால், அற்புதங்களை வலியுறுத்தி அவர் பிரசங்கம் பண்ணவில்லை. அற்புதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவுமில்லை. ஜனங்களைக் கண்டு மனதுருகின அதே வேளையில் அவருடைய உபதேசமானது ஆரோக்கியமானதாகக் காணப்பட்டது. மனிதர்களைப் பிரியப்படுத்தும்படி அவர் ஒருபோதும் பேசியதில்லை. பிதாவின் சித்தத்தையே தமது ஊழியமாகக் கொண்டிருந்தார்.

“வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே” எனக் கூறி அழைத்தார் (மத். 11:28). ஆனால், இயேசுவின் இந்த அழைப்பானது உலகத்தில் பலவிதமான பாரங்களை சுமப்பவர்களுக்கான அழைப்பாயிராமல் பாவ சுமையை விருப்பமின்றி சுமக்கும் மனிதர்களுக்கான அழைப்பாகவே இருந்தது (ரோம. 7:15-24). தம்மைப் பின்பற்றுகிறவர்கள் அதிகமான பிரச்சனைகளை இந்த பூமியில் சந்திக்கவேண்டியுள்ளது என்பதை இயேசு வெளிப்படையாகவே கூறியுள்ளார் (யோவான். 16:33, மத். 16:24, லூக். 9:23). ஆகவே, வருத்தப்பட்டு பாரஞ்சுமப்பவர்களே என்ற வார்த்தையை வைத்துக்கொண்டு, இயேசு உலகப்பிரகாரமான சகல பிரச்சனையிலிருந்தும் இளைப்பாறுதல் தருகிறார் என எண்ணக்கூடாது. அப்படிப்பட்ட பிரசங்கமானது வேதத்தை சரியாகக் கற்றுக் கொள்ளாத இன்றைய ஊழியர்களின்

பிரசங்கமாகும்.

இயேசுவின் உபதேசமானது ஆரோக்கியமான உபதேசமாகவே இருந்துவந்தது. மோசேயின் நியாயப்பிரமாணங்களைக் கடைப்பிடித்துவந்த யூத ஆசாரியர்கள் ஜனங்களுக்குப் பிரியமானபடி உபதேசம் பண்ணிவந்தார்கள். ஜனங்களின் புகழ்ச்சியை அவர்கள் விரும்பியதே அதற்குக் காரணமாகும் (மத். 23:1-7). ஆரோக்கியமான உபதேசங்களைப் பேசாமல் தங்களது சுய விருப்பத்தின்படி ஜனங்களை வீண்பெருமை அடையச்செய்யும்படியாக உபதேசம் பண்ணினார்கள் (மத். 23:13-14). அவர்களது உபதேசமானது மனிதர்களை தேவனிடம் கொண்டுவரவில்லை மாறாக அழிவிற்கு நேராக நடத்தியது (மத். 23:15).

ஜனங்கள் வேத அறிவில் வளராமல் ஆவிக்குரிய வாழ்வில் குழந்தைகளாக இருக்கும்படியாகவே ஆசாரியர்களும் வேதபாரகரும் அவ்வாறு போதித்துவந்தார்கள். ஆனால், இயேசுவின் உபதேசமானது ஆரோக்கியமான ஒன்றாக காணப்பட்டது. காரணம், எந்த ஒரு மரமும் வளர்ந்து ஆரோக்கியமடைந்தால் ஒழிய கனி தராததுபோல, விசுவாசிகளும் ஆரோக்கியமான உபதேசத்தில் வளர்ந்தால் ஒழிய கனிகொடுக்கமாட்டார்கள். தேவனால் அழைக்கப்பட்டவர்கள் அவருக்காகக் கனி கொடுக்கவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகும். ஆகவே, இயேசு ஆரோக்கியமான உபதேசங்களையே கடைப்பிடித்தார். தம்மை நாடி வந்தவர்களிடம் வெளிப்படையாகவே பேசி தேவனுடைய ராஜ்யத்தின் நிமித்தமாக உபத்திரவம் வரும் என எச்சரித்தார்.

இயேசுவின் ஆரோக்கியமான உபதேசத்தைக் கேட்ட சீஷர்களில் சிலர் அவரைவிட்டு விலகினார்கள் (யோவான். 6:60-66). இயேசுவின் ஆரோக்கியமான உபதேசத்தை பெரும்பாலான மனிதர்கள் விரும்பமாட்டார்கள். ஆறுதல், ஆசீர்வாதம், செழிப்பு போன்ற உபதேசங்களையே விரும்புவார்கள் (2 தீமோ. 4:3-4).

ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து தேவனுக்கென கனி கொடுக்க விரும்புகிறவர்கள் மட்டுமே ஆரோக்கியமான உபதேசங்களை ஏற்றுக்கொள்வார்கள். உண்மையாக இரட்சிக்கப்படுகிறவர்கள் தேவனுடைய ஆரோக்கியமான உபதேசத்தை விரும்பி ஏற்றுக்கொள்வார்கள். ஆரோக்கியமான உபதேசங்களை விரும்புகிறவர்களை இந்த உலகத்தில் எதுவும் அசைப்பதில்லை (மத். 7:24-25).

எந்த ஒரு குழந்தையும் வளரும்போது அதன் வயதுக்கு தக்கதான ஆகாரமும் மாறும். பாலை மட்டுமே உண்ணுமாகில் எந்தக் குழந்தையும் ஆரோக்கியமடைவதில்லை. அதுபோலவே, ஆரோக்கியமான உபதேசங்களில் வளராதவர்கள் ஆவிக்குரிய பெலன், அறிவு, தெளிவு போன்றவை இல்லாதிருப்பார்கள் (1 கொரி. 3:1-3; எபே. 4:14; எபி. 5:12-14). தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் நன்றாக வளரவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாகும் (கொலோ. 1:9-10). கிறிஸ்துவின் உபதேசமானது ஆரோக்கியமான ஒன்றாக இருப்பதற்குக் காரணம் தேவனுடைய உண்மையான அன்பாகும்.

போர்க்களத்தில் நிற்கும் வீரன் ஆரோக்கியம் இல்லாதவனாக இருப்பானாகில் தோல்வியடைவானல்லவா? அதுபோலவே, விசுவாசப் போர்களத்தில் நிற்கும் விசுவாசியும் ஆரோக்கியமற்ற உபதேசம் கேட்டு ஆவிக்குரிய பெலனின்றி வாழும்போது தோல்வி நிச்சயம். ஆரோக்கியமற்ற விசுவாசியை பிசாசு எளிதில் மேற்கொள்ளுவான். கிறிஸ்துவின் ஆரோக்கியமான உபதேசங்களை விரும்பாத விசுவாசிகளும் ஊழியர்களும் பெருகிவருகிறார்கள். இவர்களது முடிவானது மிகவும் பரிதாபகரமான ஒன்றாக இருக்கும். எவ்விதமான சோதனைகள், பாடுகள், உபத்திரவங்கள் வந்தாலும் இயேசுவுடன் நிலைத்திருக்கும்படி விசுவாசிகள் வளரவேண்டும்.

ஆரோக்கியமான உபதேசத்தை விரும்பாதவர்களின் வாழ்க்கையில் ஆவிக்குரிய கனிகள் இருப்பதேயில்லை.

கிறிஸ்துவின் ஆரோக்கியமான உபதேசங்களை விரும்புவோரை தேவனும் விரும்புவார். அவர்கள் அதிகமான கனிகளைக் கொடுக்கும்படி வளருவார்கள். ஆரோக்கியமான உபதேசத்திற்கு செவிகொடாதவர்கள் தவறான உபதேசம், கள்ளத்தீர்க்கதரிசனம், பொய்யான தரிசனங்கள், வெளிப்பாடுகள், அற்புத அடையாளங்கள், இனிமையான செய்திகள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். தேவனை நேசிப்பதைவிட ஊழியர்களை நேசிப்பார்கள் (லூக். 6:26).

* * *

அதிகாரம் 5

தங்கள் சீஷரையும் ஏரோதியரையும் அவரிடத்தில் அனுப்பினார்கள். அவர்கள் வந்து: போதகரே, நீர் சத்தியமுள்ளவரென்றும், தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும், நீர் முக தாட்சிணியம் இல்லாதவராகையால் எவனைக் குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந் திருக்கிறோம். மத். 22:16 (மாற். 12:14, லூக். 20:21)

கிறிஸ்துவின் உபதேசங்களில் மிகவும் முக்கியமானவை "சத்தியம்" ஆகும். சத்தியம் என்பது கிறிஸ்தவ விசுவாசத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். காரணம், சத்தியத்தை அறியாத ஒருவன் பரலோகம் செல்ல இயலாது (யோவான். 8:32). இயேசுதாமே சத்தியமாக இருக்கிறார் (யோவான். 14:6). சத்தியமாகிய இயேசுவை அறியாதவன் எவ்வாறு பரலோகம் செல்லமுடியும்? அடுத்ததாக சத்தியம் என்பது தேவனுடைய வசனத்தைக் குறிக்கிறது (யோவான். 17:17). அப்படிப்பட்ட சத்தியமான வசனமும் அந்த வசனத்தில் மறைந்துள்ள தேவனுடைய நோக்கம், சித்தம், இரட்சிப்பின் திட்டம், ஒழுக்கமான வாழ்க்கை போன்றவைகளும் மிகவும் முக்கியமானவைகள்.

பரிசேயர்களின் சீஷர்களும் ஏரோதியரும் இயேசுவினிடத்தில் வந்து என்ன கூறினார்கள்? இயேசுவை சத்தியமுள்ளவர் எனவும், தேவனுடைய மார்க்கத்தை சத்தியமாய் போதிக்கிறவரென்றும், முகதாட்சிணியம் இல்லாதவரென்றும் கூறினார்கள். இயேசுவின் உபதேசத்தின் இயல்புகளை அவர்களே கூறிவிட்டார்கள். அவர்கள் இவ்வாறு புகழ்ந்து பேசுவதற்கான காரணம் இயேசுவை அகப்படுத்தும்படியாகவே இருந்தது (மத். 22:15). ஆகவே,

இயேசுவின் உபதேசமானது சத்தியமுள்ளது என்பதை உண்மையிலேயே அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் இயேசுவை அகப்படுத்த நினைக்காமல் இயேசுவின் சீஷர்களாக மாறி இரட்சிக்கப்பட்டிருப்பார்கள் அல்லவா? ஆகவே, இயேசு சத்தியமுள்ளவர் அவருடைய உபதேசம் சத்தியமுள்ளது. ஆனால் அவரிடம் வந்து கேள்வி கேட்டவர்கள் பொய்யர் (மத். 22:18).

நீர் சத்தியமுள்ளவரென்றும்

இயேசு சத்தியமுள்ளவர், காரணம் அவர் பொய்யின் பிதாவாகிய பிசாசானவனுக்கு எதிர்மறையானவர் (யோவான். 8:44). இரண்டாவதாக, இயேசு பிதாவாகிய தேவனிடமிருந்து வந்தவர். ஆகவே, அவர் பொய் சொல்லவேண்டிய அவசியமில்லை. தேவனுடைய வார்த்தைதான் சத்தியம். அந்த வார்த்தைதான் இயேசுவாக வந்தது (யோவான். 1:1; 14,17; 14:6). பிதாவாகிய தேவனிடமிருந்து வருகிறதான யாவும் உண்மையுள்ளவைகள். இயேசு பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்டபடியால் சத்தியமுள்ளவர். அவர் சத்தியமுள்ளவர் என அழைக்கப்பட மற்றொரு காரணம், அவர்தமது பிதாவினிடத்தில் கேட்டவைகளை மட்டுமே போதித்தார் (யோவான். 8:40; 12:49).

இயேசு பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்டவராகையால் சத்தியத்தைப் போதித்து சத்தியத்தில் நிலைத்து நின்றார். ஆனால், பிசாசும் அவனது மனிதர்களும் சத்தியத்தில் நிலைநிற்க முடியவில்லை. காரணம் பிசாசு பொய்யனாய் இருக்கிறான் (யோவான். 8:44) அவன் தேவனால் அனுப்பப்பட்டவனும் அல்ல.

இயேசு சத்தியமுள்ளவராக இருப்பதற்கு வேறொரு காரணம் என்ன? "சத்தியம்" என்ற வார்த்தைக்கு "உண்மை" என்ற பெயரும் உண்டல்லவா? ஆகவே, இயேசு சத்தியமுள்ளவர் எனக் கூறும்போது அவர் உண்மையுள்ளவர் எனவும் பொருள்படும். அவர் "உண்மையுள்ள சாட்சி" என்ற பெயரையும் பெற்றிருக்கிறார் அல்லவா? (வெளி. 1:5a). அப்படியானால், அது எந்த உண்மை? இயேசுவின் பிறப்பிற்கு முன்பு கொடுக்கப்பட்டிருந்த மோசேயின்

நியாயப்பிரமாணங்கள் அனைத்துமே உண்மையானவைகள் அல்ல. ஆனால் உண்மையானவையின் நிழலாக இருந்தது (எபி. 10:1; யோவான். 1:17; கொலோ. 2:17).

நியாயப்பிரமாணம் சத்தியம் என அழைக்கப்படவில்லை. நியாயப்பிரமாணம் என்பது வரவிருந்த சத்தியமாகிய இயேசுவை வெளிப்படுத்தும் ஒன்றாகக் காணப்பட்டது. சத்தியமாகிய இயேசு வந்தபோது நிழலாகிய நியாயப்பிரமாணம் ஒழிந்துபோயிற்று. நியாயப்பிரமாணமாகிய நிழலின் மூலமாக இரட்சிப்பு வரவில்லை. சத்தியமாகிய இயேசுவின் மூலமாகவே இரட்சிப்பு வந்தது. ஆகவே இயேசு சத்தியமுள்ளவராயிருக்கிறார்.

தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறவரென்றும்

கிறிஸ்துவின் உபதேசமானது சத்தியம் நிறைந்ததாகக் காணப்பட்டதின் காரணம் என்ன? அவர் தேவனுடைய மார்க்கத்தை அப்படியே போதித்தார். தேவனுடைய மார்க்கத்தை மாற்றி தமது சொந்தமாகப் போதிக்கவில்லை. சத்தியத்தை சத்தியமாகப் போதிக்கவேண்டுமெனில் முதலாவதாக சத்தியத்தை நன்றாக அறிந்திருத்தல் அவசியம். மட்டுமல்லாது சத்தியத்தை யாரிடமிருந்து கேள்விப்படுகிறோம் என்பதும் முக்கியமான ஒன்றாகும். இயேசு சத்தியத்தை எங்கிருந்து கேட்டுப் பெற்றுக்கொண்டார்? பிதாவாகிய தேவனிடமிருந்து (யோவான். 12:49-50; 14:10).

பிதாவானவர் எனக்குச் "சொன்னபடியே" பேசுகிறேன் என இயேசு கூறினார். இதன் அர்த்தம் என்ன? பிதாவின் வார்த்தைகளை அப்படியே பேசினார். அசாவது பிதாவானவரின் வார்த்தைகளில் எதையும் மாற்றாமலோ மறைக்காமலோ அப்படியே பேசினார் என்பதுதான் அதன் பொருளாகும். தேவனுடைய வார்த்தையின் சரியான நோக்கத்தை அப்படியே வெளிப்படுத்துவதுதான் சத்தியமாய்ப் போதிப்பதாகும் (2 கொரி. 2:17; 4:2). தேவனுடைய வார்த்தைகளில் சொந்தக் கருத்துக்களைத் திணித்து தவறான விளக்கம் கொடுப்பது

சத்தியமான போதனையல்ல (நீதி. 30:5-6; வெளி. 22:19). தேவனால் அருளப்பட்ட பிரகாரம் பேசாமல் சொந்தக் கருத்துக்களை வசனங்களுடன் இணைப்பவன் சத்தியமானவன் அல்ல அவன் பொய்யன் (நீதி. 30:6). தேவனுடைய வசனத்தைப் புரட்டுகிறபடியால்தான் பிசாசு பொய்யன் என அழைக்கப்படுகிறான் (யோவான். 8:44). ஆனால், இயேசு சுயமாகப் பேசாமல் பிதாவானவர் சொன்னபடியே பேசினார். ஆகவே, அவரது போதகமானது சத்தியமுள்ளதாகக் காணப்பட்டது.

மேலும், இயேசு சுயசித்தத்தைத் தேடாமல் பிதாவின் சித்தம் செய்ய வந்தபடியால் சத்தியத்தை சத்தியமாகப் போதித்தார் (யோவான். 6:38). சொந்த விருப்பத்தை நிறைவேற்றும் பிசாசும் மனிதர்களும் மட்டுமே தேவனுடைய மார்க்கத்தைப் புரட்டி சத்தியத்தைப் பொய்யாக மாற்றுவார்கள். சுய இலாபத்திற்காக இன்றும் தேவனுடைய வார்த்தையாகிய சத்தியம் உலகளவில் புரட்டப்படுகிறதே. தேவனுடைய வசனம் கூறுவதன் சரியான விளக்கத்தைத் தெளிவாகக் கற்று அதன்படியே போதிப்பதுதான் சத்தியத்தை சத்தியமாகப் போதித்தலாகும். தேவனால் கூறப்படாதவைகளையும் வேதத்தின் அடிப்படையற்றவைகளையும் போதிப்பது சத்தியமல்ல. சத்தியம் என்ற பெயரில் மறைந்துள்ள அசத்தியமாகும்.

நீர் முகதாட்சிணியம் இல்லாதவராகையால்

பரிசேயர்களின் சீஷர்களும் ஏரோதியரும் இயேசுவைப்பற்றிக் கூறின அடுத்த வார்த்தை "முகதாட்சிணியம் இல்லாதவர்" என்பதாகும். கிறிஸ்துவின் உபதேசமானது முகதாட்சிணியம் இல்லாத ஒன்றாகும். பணக்காரர்களுக்கு ஒரு உபதேசமும் ஏழைகளுக்கு மற்றொரு உபதேசமும், கல்விமான்களுக்கு ஒரு உபதேசமும் கல்வியறிவற்றவர்களுக்கு மற்றொரு உபதேசமும் பண்ணுகிறவர் கிறிஸ்துவல்ல. முகதாட்சிணியம் என்பது மனிதனுடைய சுபாவமாக உள்ளது. சபைகளில் பணக்கார விசுவாசிகளுக்கு ஒரு நியாயமும் ஏழை விசுவாசிகளுக்கு மற்றொரு

நியாயமும் இன்றும் காணப்படுகிறதல்லவா? கிறிஸ்துவின் உபதேசங்கள் அனைத்துமே அனைத்து மனிதர்களுக்கும் பொருந்தும்.

எவனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக்கிறோம்

எந்த ஒரு மனிதனையும் தரம்பார்த்து போதிப்பது கிறிஸ்துவின் உபதேசம் அல்ல. எவ்வளவு பெரிய மனிதனாக இருப்பினும் கிறிஸ்துவின் உபதேசமானது அவனைக் கண்டித்து சீர்த்திருத்தும். கடிந்து போதித்தால் பணக்கார விசுவாசிகள் சபையைவிட்டுப் போய்விடுவார்கள் என்ற பயம் கிறிஸ்துவுக்கு இல்லை. கிறிஸ்து இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களில் பரிசேயரும், சதுசேயரும், ஆசாரியர்களும், வேதபாரகர்களும் அவரால் கடிந்துகொள்ளப்பட்டார்கள் (மத். 23:1-35). எவனைக்குறித்தும் கவலைப்படாமல் கிறிஸ்து பேசினார். இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்தவந்த யோவானும் ஏரோதைக்குறித்துக் கவலைப்படாமலும் பயப்படாமலும் சத்தியத்தைப் பேசினபடியால் கொலைசெய்யப்பட்டான் (லூக். 3:19-20). ஆகவே, கிறிஸ்துவின் உபதேசமானது எவனைக்குறித்தும் கவலைப்படாமல் முகமுகமாய்ப் போதிக்கிற ஒன்றாகும்.

தவறான உபதேசம், தீர்க்கதரிசனம், வெளிப்பாடுகள் போன்றவைகளைக் கொண்டுவருகிற எத்தனையோ மனிதர்களை மனப்பூர்வமாக சபைகளில் அனுமதிக்கும் ஊழியர்களும் இன்று உண்டு. இதற்குக் காரணம் என்ன? அப்படிப்பட்ட ஊழியர்களின் சில உதவிகள் தேவைப்படுவதால் அவர்களைப் பகைத்துக்கொள்ள விருப்பமில்லை. இது கிறிஸ்துவின் உபதேசத்திற்கு மாறுபட்ட ஒன்றாகும்.

* * *

அதிகாரம் 6

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம், இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும், இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்:

பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள், அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.

உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். மத். 6:19-21

கிறிஸ்து இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களில் தமது உபதேசமானது ஜனங்களை நித்தியத்திற்கு நேராக திருப்பும்படியாகப் பார்த்துக்கொண்டார். பரலோக ராஜ்யத்தைக்குறித்தும், அங்குள்ள மெய்யான வாழ்வைக்குறித்தும், அங்கு செல்லவிருக்கும் விசுவாசிகள் இந்த உலகில் எவ்வாறு வாழவேண்டும் என்பவைகளையும் அதிகமாகப் போதித்தார். எந்த இடத்திலும் யாருக்குமே பூமிக்குரிய செழிப்பை வாக்குப்பண்ணவில்லை. என்னை ஏற்றுக்கொள்பவர்களை செல்வந்தர்களாக மாற்றுகிறேன் எனக்கூறாமல் செல்வந்தர்கள் தங்களது செல்வங்களைவிட்டு என்னைப் பின்பற்றுங்கள் எனப் போதித்தார் (மத். 19:16-24). இயேசுவின் சீஷர்கள் அனைவருமே தங்களது அன்றாடத் தொழில்களையும் விட்டு இயேசுவைப் பின்பற்றினார்கள் (மத். 19:27-29).

என் நாமத்தினிமித்தம் எல்லாவற்றையும் விட்டவன் எவனும் நூறத்தனையாய் அடைவான் (மத். 19:29) என்ற வசனத்தைப்

பிடித்துக்கொண்டு இந்த பூமியில் நூறத்தனையான பலன் கிடைக்கும் எனப் போதிப்பவர்களும் உண்டு. அப்படியானால், இதே வசனத்தில் “மனைவி” என்ற வார்த்தையும் வருகிறதல்லவா? ஆகவே தன் மனைவியை விட்டு இயேசுவைப் பின்பற்றுபவனுக்கு நூறு மனைவி கிடைக்குமா? இல்லை. இயேசு அந்த அர்த்தத்தில் கூறவில்லை. நித்திய ஜீவனுடனான பிரதிபலன்களையே இயேசு இங்கு கூறுகிறார். அவைகளை மறுமையில் நிச்சயமாக அடைய முடியும். இயேசுவை ஏற்றுக்கொண்டு உண்மையாய் ஊழியம் செய்தபோதிலும் தங்களுக்கு உண்டாயிருந்த ஆஸ்தி, மனைவி, பிள்ளைகள், பெற்றோர், உடன்பிறப்புகள் போன்றோரை இழந்து இறுதிவரை பரலோக வாழ்வையும் இயேசுவையும் மட்டுமே விரும்பி வாழ்ந்த எண்ணற்ற தேவ மனிதர்கள் வாழ்ந்ததுண்டு.

மனிதன் இந்த பூமியிலேயே நித்தியமாக வாழும்படி சிருஷ்டிக்கப்பட்டிருந்தால் இயேசு சகல செழிப்பையும் மனிதனுக்கு இந்த பூமியிலேயே கொடுத்திருப்பார். ஆனால், இந்த உலகில் மனிதனின் வாழ்வு தற்காலிகமானது. ஆகவே, தற்காலிகமான இந்த வாழ்க்கைக்கு அளவான தேவைகள் மட்டுமே போதும் என்பதை இயேசு தெளிவாகப் போதித்துள்ளார் (மத். 6:11, 34) இயேசுவின் சீஷர்களும் அதையே போதித்துள்ளனர் (1 கொரி. 7:29-31; 1 தீமோ. 6:6-10; எபி. 13:5). விசுவாசிகளின் இருதயமானது எப்போதும் பரலோகப் பொக்கிஷங்களின்மேல் இருக்கவேண்டும் என்பது கிறிஸ்துவின் உபதேசமாகும் (மத். 6:21; கொலோ. 3:1-2).

தேவனுடைய பிள்ளைகளுக்கு அளவான ஆசீர்வாதம் இந்த பூமியில் போதுமானது என்பதைப் பழைய ஏற்பாடும் கூறுகிறதல்லவா? (உபா. 17:17-20; நீதி. 30:7-10). ஆகவே, இந்த பூமிக்குரிய ஆசீர்வாதங்களில் மயங்கிவிடாமல் பரலோகத்தின்மேல் நோக்கமாயிருக்கும்படி கிறிஸ்துவின் உபதேசமானது காணப்பட்டது.

அப்போஸ்தலரின் உபதேசம்

இரட்சிக்கப்பட்டவர்கள் அப்போஸ்தலரின் உபதேசத்தில்

நிலைத்திருந்ததாக வேதம் கூறுகிறது (அப். 2:42a). அப்போஸ்தலரின் உபதேசத்தை “அஸ்திபாரம்” எனவும் வேதம் அழைக்கிறது (எபே. 2:20). கிறிஸ்துவின் உபதேசமும் அப்போஸ்தலரின் உபதேசமும் வெவ்வேறானவைகள் அல்ல. இரண்டும் ஒன்றே. காரணம், இயேசு கட்டளையிட்டவைகளை மட்டுமே அப்போஸ்தலர்கள் உபதேசித்தார்கள் (மத். 28:20; 1 யோவான். 1:1; 2 கொரி. 2:17). மனிதர்கள் இரட்சிக்கப்படுவதற்கு தாம் மட்டுமே வழி என்பதை இயேசு கூறினார் (யோவான். 14:6). அவர் கூறிய அதே உபதேசத்தையே அப்போஸ்தலர்களும் போதித்தார்கள் (அப். 4:12).

அப்போஸ்தலனாகிய யோவானும்கூட வெளிப்படுத்தின விசேஷத்தில் தன்னுடைய சொந்த வெளிப்பாடுகளைக் கூறாமல், தான் இயேசுவிடம் கேட்டவைகளை மட்டுமே வெளிப்படுத்தி எழுதினான் (வெளி. 1:19). அப்போஸ்தலர்களும் இயேசுவிடம் கேட்டவைகளை மட்டுமே உபதேசித்தார்கள் (அப். 4:20). நிருபங்கள் யாவும் அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டவைகளாகும். அந்த நிருபங்களை அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தியவர் பரிசுத்தஆவியானவர் (2 தீமோ. 3:16; 2 பேது. 1:21). ஆகவே, கிறிஸ்துவின் உபதேசமும் அப்போஸ்தலர்களின் உபதேசமும் ஒன்றே.

* * *

பகுதி 2

பிசாசின் உபதேசங்கள்

பிசாசின் உபதேசங்கள்

***ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்* 1 தீமோ. 4:1**

கிறிஸ்துவினுடைய உபதேசத்திற்கு அடுத்ததான உபதேசம் பிசாசின் உபதேசமாகும். பிசாசின் உபதேசமானது பலவிதத்தில் வருகிறது. எந்த ஒரு தேசமும் மூன்று விதமான படைகளை வைத்திருக்கும். தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை. காரணம், இம்மூன்றையும் பயன்படுத்தினால் ஒழிய போரில் எதிராளியை வெல்ல முடியாது. அதுபோலவே, தன்னுடைய எதிராளிகளாகிய தேவனுடைய பிள்ளைகளைத் தோற்கடிக்கும்படி பிசாசு பலவிதமான உபதேசங்களை வைத்துள்ளான். ஏதாவது ஒரு உபதேசத்தில் விசுவாசிகளை வீழ்த்திவிடலாம் என்பது அவனது நோக்கமாகும்.

பிசாசின் முதல் உபதேசமானது ஏதேன் தோட்டத்தில் ஆரம்பமானது (ஆதி. 3:1-5). முதல் உபதேசத்திலேயே மனுக்குலம் முழுவதையும் விழச்செய்தான். அது முதல் அவனது உபதேசங்கள் பல விதங்களில் பல கோணங்களில் இன்றும் நடைபெற்று வருகிறது. மண்ணினால் உருவாக்கப்பட்ட முதல் மனிதனைத் தனது வஞ்சகமான உபதேசத்தால் மயக்கினான். ஆனால் பரிசுத்தஆவியானவரால் உருவாக்கப்பட்ட இரண்டாம் மனிதனாகிய இயேசுகிறிஸ்துவையும் தனது உபதேசத்தால் மயக்க முயன்று தோற்றுப்போனான் (மத். 4:1-11). இயேசுவின் சிலுவை

மரணத்தைத் தடுத்து மனுக்குலத்தை முழுமையாக நரகத்தில் தள்ளும்படி பிசாசு பல விதங்களில் தொடர்ந்து இயேசுவுக்கு உபதேசம்பண்ணினான் (மத். 16:23). ஆனால், அவனது தந்திரமான உபதேசத்தை இயேசு புறக்கணித்து பிதாவின் சித்தத்தை செய்து முடித்தார்.

இயேசுவின் வருகையின் நாட்கள் நெருங்கும்போது பிசாசின் உபதேசங்கள் அதிக அளவில் காணப்படும். அவனுடைய உபதேசங்களுக்கு செவிகொடுத்து அநேகர் சத்தியத்தைவிட்டு (வேத வசனங்களைவிட்டு) விலகுவார்கள் என்பதை ஆவியானவர் பவுலின் மூலமாகக் கூறியுள்ளார் (1 தீமோ. 4:1). இன்றைய நாட்களில் பிசாசின் உபதேசங்களை அடையாளம் காணாமல் அநேகர் அவைகளை விரும்பி பின்பற்றுவதைக் காணமுடிகிறது. தேவனுடைய வசனங்களை வாசியாமலும் ஆராய்ந்துபார்க்காமலும் பிசாசின் வஞ்சனையான உபதேசங்களை ஜனங்கள் விரும்புகிறார்கள். இதற்குக் காரணமென்ன? இயேசுவின் உபதேசமானது கடினமான உபதேசமாகவும், பிசாசின் உபதேசமானது கேட்பதற்கு இனிமையாகவும் இருப்பதேயாகும்.

"புசிக்கவேண்டாம்" என தேவன் கூறினார் (ஆதி. 2:17) "புசிக்கலாம்" என பிசாசு கூறினான் (ஆதி. 3:5). இவை இரண்டில் சுலபமானது எது? புசிக்கலாம் என்பதாகும். இன்றும்கூட கிறிஸ்துவின் ஆரோக்கியமான உபதேசத்தை கேட்க மனதில்லாமல் ஆரோக்கியமற்றதும் இனிமையானதுமான பிசாசின் உபதேசங்களையே மனிதர்கள் அதிகமாக விரும்புகிறார்கள் (2 தீமோ. 4:3-4). தங்களைக் கண்டித்து உணர்த்தும் பரிசுத்தஆவியானவரின் உபதேசங்களைத் தள்ளி (யோவான். 16:8) தங்களைப் பொய்யாக ஆதரிக்கும் பிசாசின் உபதேசங்களை விரும்புகிறார்கள்.

ஏவாளை வஞ்சிக்கும்படி பிசாசு நேரடியாக உபதேசம் பண்ணினான். ஆனால், இன்றைய நாட்களில் அவன் நேரடியாக வராமல் அவனது தூதர்களைப் பல பொறுப்புகளுடன் அனுப்பி

அநேக விதங்களில் உபதேசம் பண்ணுகிறான். பிசாசின் தூதர்கள் அநேகர் உண்டு (1 யோவான். 4:1). பிசாசின் தூதர்களால் பயன்படுத்தப்படுகிற மனிதர்களும் அநேகர் உண்டு (2 கொரி. 11:13-15). பிசாசையும் அவனது மனிதர்களின் தவறான உபதேசங்களையும் வேத வசனத்தின் அடிப்படையில் மட்டுமே சோதித்து அறிய முடியும். பரிசுத்தஆவியானவர் பேசுவது போலவே பிசாசும் பேசுவான். அவனது உபதேசங்களை அறிந்துகொள்ள வேத வசனமாகிய பட்டயம் மட்டுமே உதவும் (எபே. 6:17b).

வேத வசனங்கள் அனைத்துமே விசுவாசிகளின் நன்மைக்காகப் பரிசுத்தஆவியானவரால் கொடுக்கப்பட்டுள்ளது (2 தீமோ. 3:16-17; 1 பேதுரு. 1:21). அப்படியிருக்கையில், வேத வசனங்களைப் பரிசுத்தஆவியானவரின் உதவியுடன் தியானிக்காமல் அவைகளை அசட்டைசெய்து, பரிசுத்தஆவியானவர் எனக்குள் இருப்பதால் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் எனக் கூறினால், பிசாசின் உபதேசங்களில் விழுவது நிச்சயம். இயேசு பரிசுத்தஆவியானவரால் நிரப்பப்பட்ட பின்புதான் பிசாசினால் சோதிக்கப்பட்டார். ஆனால், பிசாசின் உபதேசங்களை முறியடிக்க வேத வசனங்களையே அவர் பயன்படுத்தினார் என்பதை மறக்கக் கூடாது.

தவறான உபதேசங்களைக் கடைப்பிடித்துவந்த யூதர்களிடமும் இயேசு வேத வசனங்களின் அடிப்படையிலேயே பதிலளித்துப் பேசினார். பிசாசின் உபதேசங்களை வேத வசனங்கள் மட்டுமே அடையாளம் ஆதிமுதலே தேவனுடைய உபதேசத்திற்கு எதிராக பிசாசு செயல்பட்டுவருகிறான். "உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு" என அழைக்கப்படுகிறான்(வெளி. 12:9). அவனது உபதேசமானது மனதை மயக்குகிறதாக உள்ளது (2 தீமோ. 2:26). உபதேச தந்திரங்களை நன்றாகப் பயன்படுத்துவான். யாரை எவ்வாறு மயக்குவது என்பதை நன்றாக அறிந்தவனாவான்.

அதிகாரம் 1

பிசாசின் உபதேசத்தின் இயல்புகள்

தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். 2 கொரி. 4:4

பாவத்தில் விழுந்த மனிதன் மன்னிப்பைப் பெற்று மறுபடியும் தேவனுடனான உறவைப் புதுப்பித்து அவருடன் ஒப்புரவாகும்படி அவனுக்குக் கொடுக்கப்படும் அழைப்புதான் சுவிசேஷமாகும். இயேசு உனது பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தி உன்னை தேவனுடன் ஒப்புரவாக்கியுள்ளார் என்பது அவனுக்கு வருகிறதான நற்செய்தியாகும். இந்த செய்தியானது உலகம் முழுவதிலும் உள்ள மனிதர்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகும் (மத். 28:19). இப்படிப்பட்ட நல்ல செய்தியினைத் தடைசெய்யும்படி பிசாசு தனது தந்திரத்தைக் கையாண்டுவருகிறான். மெய்யான சுவிசேஷத்தைத் தடுப்பதற்குப் பொய்யான இரு வழிகளைக் கையாண்டுவருகிறான்.

முதலாவதாக, உண்மையான சுவிசேஷத்தின் ஒளியானது அவிசுவாசிகளின் இருதயத்தைப் பிரகாசமடையச் செய்யவிடாமல் பிசாசு தடுக்கிறான். எவ்வாறு தடுக்கிறான்? அவர்களது மனக் கண்களைக் குருடாக்குகிறான். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது அதைக் கேட்பவர்கள் அநேகர் உண்டு. ஆனால், அவர்களது மனக் கண்கள் திறக்கப்படுவதில்லை. இதன் காரணமாகவே, அவர்களால் இயேசுவை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இப்படி

அவனால் குருடராக்கப்பட்டவர்களை "கண்களிலிருந்தும் காணாதவர்கள்" என இயேசு அழைத்தார் (மத். 13:13-15).

இயேசு இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களில், அநேகர் அவரை ஏற்றுகொண்டார்கள் ஆனால், அவரால் நடைபெற்ற அற்புத அடையாளங்களைக் கண்ட எண்ணற்ற ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. உலக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள் ஆனால் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை ஏற்க மறுத்துவிட்டார்கள். இதற்குப் பின்னால் இருப்பது பிசாசின் வஞ்சனையாகும். காரணம், பிசாசினால் குருடராக்கப்பட்டவர்கள் பிசாசின் கிரியைகள் அந்தகாரக் கிரியைகளாக இருப்பதனால் அவைகளை அதிகம் விரும்புகிறார்கள். அந்தகாரக் கிரியைகள் மிகவும் கவர்ச்சிகரமான பாவங்களாக இருப்பதனால் அப்படிப்பட்ட பாவங்களை மனிதர்கள் விரும்பிச் செய்கிறார்கள் (யோவான். 8:44).

சுவிசேஷமாகிய ஒளியினிடத்தில் வந்தால் அவர்களது அந்தகாரக் கிரியைகள் கடிந்துகொள்ளப்படும். பாவத்தைவிட்டு விலக மனதில்லாதவர்களாக இருப்பதனால் உண்மையான ஒளியாகிய சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் (யோவான். 3:19-20). இப்படிப்பட்ட வஞ்சனைக்குப் பின்னால் செயல்பட்டு மனிதர்களைத் தடுத்து அவர்களது மனக் கண்களைக் குருடாக்குகிறவன் பிசாசுதான். ஆனால், தேவனால் முன்குறிக்கப்பட்டவர்களின் மனக் கண்களைப் பிசாசினால் குருடாக்க இயலாது (மத். 16:16-17).

இரண்டாவதாக, இயேசுவிடம் வரவிரும்பும் சிலரை சுவிசேஷம் என்ற பெயரில் வஞ்சித்து தனது வஞ்சக வலைக்குள் வைத்துக்கொள்வான். அதற்காக சுவிசேஷம் என்ற வார்த்தையைப் பயன்படுத்துவான். அப்போஸ்தலனாகிய பவுல் இதை "வேறொரு சுவிசேஷம்" எனக் குறிப்பிட்டுள்ளார் (2 கொரி. 11:4; கலா. 1:6-9). இப்படிப்பட்ட சுவிசேஷமானது பிசாசினாலும் அவனுடைய மனிதர்களாலும் வருகிறது. மனந்திரும்பி இயேசுவை விசுவாசிக்கவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகும். ஆனால்,

மனந்திரும்பாமல் இயேசுவை ஏற்றுக்கொள்ள வைப்பது பிசாசின் சுவிசேஷமாகும்.

எப்படியெனில், இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமலும், அவர் மூலமாக மட்டுமே இரட்சிப்பு உண்டென்பதை விசுவாசியாமலும் அவரைப் பொதுவான கடவுளாக ஏற்றுக்கொள்ளும்படி ஜனங்களை வஞ்சிப்பான். தற்காலிகமான அற்புத அடையாளங்கள், ஆசீர்வாதங்கள் போன்றவைகளுக்காக மட்டுமே இயேசுவை ஏற்றுக்கொள்ளும்படியான சுலபமான சுவிசேஷத்தைப் போதிப்பான் (யோவான். 6:26-27; 1 கொரி. 15:19). நித்திய ஜீவனுக்காக இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல் தற்காலிகமான ஆசீர்வாதங்களுக்காக ஏற்றுக்கொள்ளும்படி வஞ்சிப்பான். இப்படிப்பட்டவர்கள் இன்று ஏராளமானோர் உண்டு. இரட்சிக்கப்பட்டவர்கள்போல் தோன்றுவார்கள். ஆனால் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டுள்ளதை உணரமாட்டார்கள் (மத். 7:26-27).

இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத மனிதர்களை சபைகளிலும் கொண்டுவர பிசாசுக்கு இயலும் (மத். 13:24-30; 1 யோவான். 2:19; 2 பேது. 2:1; யூதா. 1:4). இப்படிப்பட்டவர்கள் சபையின் சகல காரியங்களிலும் பங்குபெற்றாலும் பிசாசினால் குருடாக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். நியாயத்தீர்ப்பின் நாளில் தேவனால் புறக்கணிக்கப்படுவார்கள் (மத். 7:22-23). மனந்திரும்புதல், பாவ மன்னிப்பு, பரலோகம், பரிசுத்தவாழ்க்கை போன்றவைகளைப் பிரசங்கியாமல், இயேசு ஆசீர்வதிக்கிறார், அற்புதம் செய்கிறார், செழிப்பைத் தருகிறார் என்றெல்லாம் போதிப்பது இன்றைய நாட்களில் பெருகியுள்ளது. இதற்குப் பின்னால் இருப்பது பிசாசின் தந்திரமாகும்.

இயேசு கற்பித்த சுவிசேஷத்தை மறைத்து தன்னுடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுவது சாத்தானின் மகா பெரிய தந்திரமாகும் (கலா.1:6-9). சுவிசேஷம் என்கிற பெயரில் உலக ஆசீர்வாதங்களைப் பிரசங்கித்து மனிதர்களை மோசம்போக்குவான். உண்மையான சுவிசேஷம் எது என்பதையும் சுவிசேஷம் போலத் தோன்றுகிற பொய்யான சுவிசேஷம் எது என்பதையும் தெளிவாக

அடையாளம் காணவேண்டும். இதற்காகவே "யெகோவா சாட்சியினர், மார்மோனிசம்" போன்ற உபதேசங்களையும் பிசாசு கொண்டுவந்துள்ளான். இயேசுவின் சீஷர்கள் கொலைசெய்யப்பட்டதன் முக்கியக் காரணம் உண்மையான சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணியதினால்தான். இன்றைய நாட்களில் காணப்படுகிற கவர்ச்சிகரமான சுவிசேஷத்தை அவர்கள் பிரசங்கம்பண்ணியிருந்தால் பெரிய பணக்காரர்களாக வாழ்ந்திருப்பார்கள்.

* * *

அதிகாரம் 2

ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதா வினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத் தினாலுண்டானவைகள். 1 யோவான். 2:16

பிசாசின் முதன்முதலான போதனையிலேயே இச்சையானது முக்கியமான இடத்தை பிடித்திருந்தது (ஆதி. 3:5). பிசாசின் உபதேசம் வரும்வரை ஏவாள் நன்மை தீமை அறியத்தக்க கனியை இச்சிக்கவில்லை. இச்சையில்லாத இடத்திலும் இச்சையைத் தூண்டுவதுதான் பிசாசின் தந்திரமாகும். இச்சை என்பதன் சரியான விளக்கம் என்ன? தேவைக்கு அதிகமாகவோ அல்லது தன்னுடையதல்லாத பொருளை சொந்தமாக்க நினைத்தாலோ அது இச்சை எனப்படுகிறது (பிர. 2:10). தேவனால் குறிக்கப்பட்டுள்ள எல்லையை ஒருவன் மீறும்போது இச்சையில் விழுகிறான். இச்சையானது மனிதனைவிட மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாகும். மனிதனை எளிதில் இடறப்பண்ணும் ஆயுதங்களில் இச்சையானது முதன்மையான இடத்தைப் பிடிக்கிறது.

இச்சையானது இந்த பூமியிலிருந்து உண்டானதாக யோவான் கூறுகிறார். அப்படியானால் உலகமானது யாரிடம் இருக்கிறது? பிசாசானவன் உலகத்தை தனதுவசம் வைத்துள்ளான் (லூாக். 4:5-6; 1 யோவான். 5:19b). ஆகவே, இச்சையானது பிசாசிடமிருந்து உருவாக்கப்பட்டு உலகம் முழுவதும் பரவலாக காணப்படுகிறது. உலகம் உண்டானதுமுதல் இதுவரை நடைபெற்றுவருகிற அனைத்துப் பிரச்சனைகளுக்கும் பின்னால்

இச்சை இருக்கிறது. தேவனைவிட்டு மனிதர்களை விலகச் செய்யும்படி பிசாசானவன் இச்சையான உபதேசங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளான். மகா பெரிய ஞானியாக இருந்த சாலொமோன் ராஜா தேவனைவிட்டு விலகுவதற்குக் காரணம் இச்சையாக இருந்தது (1 இரா. 11:1-10).

பல தேவ மனிதர்களும் இச்சையின் மூலமாக தேவனைவிட்டு விலகினதுண்டு. பிசாசின் இச்சையான உபதேசத்தை அடையாளம் காணாவிட்டால் விழுவது உறுதியான ஒன்று. இன்றைய நாட்களில் இச்சையைத் தூண்டும் உபதேசங்கள் உலகமெங்கும் அதிகமாகப் பெருகிவிட்டது. தேவனுடைய சித்தம் செய்வதைவிட சுய விருப்பங்களையும் சுய இச்சைகளையும் பிரசங்கம் பண்ணுகிறவர்களும் அதைப்பின்பற்றுகிறவர்களும் பெருகி வருகிறார்கள். கிறிஸ்தவனாக மாறினால் நாம் ராஜாவின் பிள்ளைகளாகிறோம். ஆகவே, எப்படிவேண்டுமானாலும் இந்த வாழ்க்கையை அனுபவித்து வாழலாம் என்ற உபதேசம் ஜனங்கள் மத்தியில் மிகவும் பிரபலமான ஒன்றாகக் காணப்படுகிறது.

இச்சையைவிட்டு விலகச் செய்வது கிறிஸ்துவின் உபதேசம். ஆனால், இச்சையைப் பற்றிக்கொள்ளும்படிப் போதிப்பது பிசாசின் உபதேசமாகும். உலகத்தை வெறுத்து இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களை மறுபடியும் உலக ஆசைக்குள்ளாகக் கொண்டுசெல்ல பிசாசு பலவிதமான இச்சை நிறைந்த உபதேசங்களைக் கொண்டுவருகிறான். இயேசுவைப் பின்பற்றுவதைவிட இச்சையானவைகளைப் பின்பற்றுவது மிகவும் எளிதான ஒன்று. ஆனால், இயேசுவின் பெயரிலேயே இவ்விதமான உபதேசங்களைப் பிசாசும் அவனுடைய மனிதர்களும் செய்வார்கள்.

உலகத்தையும் உலகத்திலுள்ளவைகளையும் நேசிக்கவேண்டாம் என்பது கிறிஸ்துவின் உபதேசமாகும் (மத். 6:19; 1 யோவான். 2:15; யாக். 4:4). ஆனால், உலகத்தில் வாழும்போது நன்றாக வாழ்ந்து எல்லாவற்றையும் அனுபவிக்கவேண்டும் என்பது பிசாசின்

உபதேசமாகும். அதற்காக அவன் வேத வசனங்களைக் கொண்டே உபதேசிப்பான். அதாவது வேத வசனங்களில் உள்ள தேவனுடைய நோக்கத்தை மறைத்து தன்னுடைய சொந்தமானதும் மனிதர்களுக்குப் பிரியமான இச்சை நிறைந்த வார்த்தைகளையும் வெளிப்படுத்தி வேத வசனத்தைத் தவறாக விளக்கி ஜனங்களை இடறப்பண்ணுவான்.

ஏனெனில், மாம்சத்தின் இச்சையும்

மாம்சத்தின் இச்சையைத் தூண்டுகிறவன் பிசாசு. உணவு, தவறான பாலுணர்வு, காமவிகாரம் போன்றவைகளாகிய மாம்சத்தின் இச்சைகளைத் தூண்டுகிறவன் பிசாசு (கலா. 5:19-21). மாம்சத்தின் இச்சையானது சகலவிதமான பிரச்சனைகளுக்கும் காரணமாக அமைகிறது. தேவன் இந்த பூமியில் படைத்ததெல்லாமே மனிதர்கள் அனுபவித்து மகிழும்படியாகத்தான் எனப் பிசாசு போதிப்பான். தேவன் கொடுத்துள்ள திறமை, கல்வி, ஆவிக்குரிய வரங்கள், செல்வம், அழகு போன்ற அனைத்துமே நாம் மகிழ்ச்சியான விதத்தில் அனுபவிக்கவே எனப் போதிப்பான்.

இயேசுவுக்கு வந்த முதல் சோதனையில் பிசாசு மாம்ச இச்சையைக் கொண்டுவந்தான் (மத். 4:2-3). தேவன் இயேசுவுக்குக் கொடுத்த வல்லமையைத் தவறாகப் பயன்படுத்தி தேவனுடைய சித்தத்தைச் செய்யாமல் தமது சொந்த விருப்பத்தை நிறைவேற்றும்படி பிசாசு இயேசுவைத் தூண்டினான். தமது சொந்தப்பசியைப் போக்கும்படி கல்லை அப்பமாக மாற்றுவதற்கு இயேசு விரும்பவில்லை. காரணம், இயேசு கல்லை அப்பமாக மாற்றி சாப்பிடும்படி இந்த பூமிக்கு வரவில்லை. அவருடைய போஜனமும் பசியும் பிதாவின் சித்தமாகவே இருந்தது (யோவான். 4:34).

பிசாசின் உபதேசமானது தேவனுடைய சித்தத்திற்கு எதிரானதாகக் காணப்படும். ஆவியானவரின் வரங்களைப் பரிசுத்தஆவியானவர் தருவது தேவனுடைய திட்டங்களையும்

சித்தத்தையும் நிறைவேற்றுவதற்காகத்தான். ஆனால், ஆவியானவரின் வரங்களைத் தன்னுடைய சொந்த இலாபத்திற்காகவும் புகழுக்காகவும் பயன்படுத்தும்படி பிசாசு உபதேசிப்பான். அப்போஸ்தலர்கள் மூலமாகப் பரிசுத்தஆவியானவரை ஜனங்கள் பெற்றுக்கொள்வதை சீமோன் கண்டபோது, அந்த வரத்தைப் பணத்தினாலே சம்பாதிக்க முயன்றான். ஆனால், பேதுரு அவனைக் கடிந்துகொண்டான் (அப். 8:14-24). பரிசுத்தஆவியின் வரத்தைப் பெற்றுக்கொண்டால் அந்த வரத்தின் மூலமாக அதிகப் பணம் சம்பாதிக்கலாம் என சீமோன் எண்ணினான். மட்டுமல்லாது அவனது பெயர் பிரஸ்தாபம் முன்பைவிட இப்போது அதிகமாக இருக்கும் எனவும் எண்ணினான் (அப். 8:9-11).

சீமோனின் பணத்தைப் பேதுரு வாங்கியிருப்பானேயாகில் அவனுக்குள் இருந்த பரிசுத்தஆவியானவரை அவன் விற்பனை செய்திருப்பான் அல்லவா? ஆனால், தேவன் தனக்குக் கொடுத்த பரிசுத்தஆவியின் வரமானது தனது சொந்த தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அல்லவென்பதைப் பேதுரு வெளிப்படுத்தினான். ஜெபத்திற்குப் பணம் வேண்டுமென எதிர்பார்க்கும் மனிதர்கள் இந்த நாட்களில் அதிகமாக உள்ளனர். இப்படிப்பட்டவர்களை வேதம் “ஆதாயத்தொழில் செய்பவர்கள்” என அழைக்கிறதல்லவா? (1 தீமோ. 6:5). தேவனுடைய கிருபை வரங்களைப் பயன்படுத்தி சுய இலாபம் அடையச் செய்வது பிசாசின் உபதேசமாகும்.

இப்படிப்பட்ட செயலுக்குப் பின்னால் இருப்பது பிசாசினால் வருகிறதான மாம்ச இச்சையாகும். தேவனுடைய உபதேசமானது மாம்ச இச்சைகளிலிருந்து மனிதர்களை விடுவிக்கும். பிசாசின் உபதேசமானது மாம்ச இச்சைகளை மனிதர்களில் தூண்டும்.

கண்களின் இச்சையும்

கண்களின் இச்சையும் மனிதனின் வீழ்ச்சியில் முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. கனியை கண்ட ஏவாள் முதலாவதாக

மாம்சத்தின் இச்சைக்கும் (ஆதி. 3:5b) இரண்டாவதாகக் கண்களின் இச்சைக்கும் (ஆதி. 3:5c) இடங்கொடுத்தாள். இவை இரண்டுமே பிசாசினால் வந்தவைகளாகும். கண்களின் இச்சையானது மாம்சத்தின் இச்சையைவிட மிகவும் பலம் வாய்ந்த ஒன்றாக உள்ளது. மாம்ச இச்சைக்களைத் தூண்டுவதில் கண்களுக்கு முக்கியமான பங்கு உண்டு என்பதை யாராலும் மறுக்க இயலாது.

பணம், பெருமை, பதவி, கல்வி, ஞானம், விபச்சாரம் போன்ற அனைத்துமே கண்களின் இச்சையாக உள்ளன. இந்த இச்சையை இரண்டாவது சோதனையாகப் பிசாசு இயேசுவுக்குக் கொண்டுவந்தான் (லூக். 4:5-7). கண்கள் காண்கிற அனைத்துமே அனுபவிக்கவேண்டியவைகள் என பிசாசு போதிப்பான். கண்களின் மூலமாக மனிதர்களை வழிவிலகச் செய்யும்படி பூமியில் பலவிதமான பாவங்களையும் மேட்டிமையான ஆடைகள் மற்றும் வாழ்க்கை முறையை சாத்தான் ஒவ்வொரு நாளும் அறிமுகம் செய்கிறான். கண்களின் இச்சைகளுக்கு இடங்கொடுக்கக் கூடாது என வேதம் தெளிவாகப் போதிக்கிறது (சங். 101:3a; மத். 5:28-29; யோபு. 31:1).

கண்கள் பார்ப்பதையெல்லாம் மனது விரும்பும். உலகப் பொருட்களை நேசிக்க வேண்டாம் என்பது கிறிஸ்துவின் உபதேசமாகும். ஆனால், உலகத்தில் உள்ள அனைத்தையும் விரும்பி அனுபவியுங்கள் என்பது பிசாசின் உபதேசமாகும். கண்களின் இச்சைகளை நிறைவேற்ற மனிதர்கள் எவ்வளவு பிரயாசப்பட்டு எவ்வாறெல்லாம் அநீதியில் ஈடுபட்டு தேவனுடைய கட்டளைகளை மீறுகிறார்கள்?

ஜீவனத்தின் பெருமையும்

பிசாசு ஏவாளிடம் கொண்டுவந்த மூன்றாவது சோதனை ஜீவனத்தின் பெருமையாகும் (ஆதி. 3:5d). இந்த உலகில் நாம் வாழ்வதற்கு வேலை, வீடு, வஸ்திரம், உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் அவசியம்தான். ஆனால், இவைகள்

அனைத்துமே மனிதனின் அடிப்படையான தேவைகளுக்காக அமையவேண்டுமே ஒழிய பெருமைக்காக அமையக்கூடாது. உயிர் வாழ்வதற்காக இவைகளை சம்பாதிப்பவர்கள் தேவனுடைய கிருபையை சார்ந்துகொள்வார்கள். பெருமைக்காக சம்பாதிப்பவர்கள் தங்களது சொந்த திறமைகளை சார்ந்துகொள்வார்கள். ஜீவனத்தின் பெருமைக்காக எல்லாப் பாவங்களையும் செய்யும்படி பிசாசு உபதேசிப்பான். தேவனுக்கு எதிரான சகல வழிகளையும் பின்பற்றும்படி போதிப்பான். இப்படிப்பட்ட உபதேசங்கள் அனைத்துமே தேவனால் உண்டானவைகளல்ல. மாறாக பிசாசின் உபதேசங்களாகும்.

* * *

அதிகாரம் 3

அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்தது மாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம் எபி. 2:4

அற்புதங்கள் அடையாளங்கள் போன்றவை இரட்சிப்பிற்கான சாட்சிகளாக இருந்தன. தேவன் அற்புத அடையாளங்களைச் செய்வதன் நோக்கமானது மனிதர்கள் அதைக்கொண்டு இரட்சிப்பை அடையும்படியாகத்தான் (அப். 14:3). எகிப்தில் தேவன் அற்புதங்களைச் செய்ததன் நோக்கம் இஸ்ரவேலரை விடுவிக்கவும், எகிப்தின் தெய்வங்களை அதம்பண்ணவும், இஸ்ரவேலரை அழைப்பது தேவனே என்பதை அவர்கள் அறியும்படியாகவுமே இருந்தது. அற்புதங்களைக்கண்டு அப்படியே எகிப்தில் இருந்துவிடும்படி தேவன் கூறவில்லை. அதுபோலவே, இயேசுவின் மூலமாக நடைபெற்ற அற்புதங்களும் அவருடைய சீஷர்கள் மூலமாக நடைபெற்ற அற்புதங்களும் மனிதர்களின் இரட்சிப்புக்காகச் செய்யப்பட்டவைகள் ஆகும்.

ஆனால், அற்புத அடையாளங்களை மட்டுமே மிகைப்படுத்தி இரட்சிப்பைக்குறித்தே பேசாமல் அற்புதம் நடைபெறுகிறதென்றால் அது பிசாசின் உபதேசமாகும். ஜனங்களின் சரீரப்பிரகாரமான அற்புதங்களைவிட ஆவிக்குரிய அற்புதமாகிய இரட்சிப்பில் தேவன் பிரியப்படுகிறார். ஆனால், இரட்சிப்பை அசட்டைபண்ணி அற்புதங்களை மட்டுமே விரும்பும்படி பிசாசு போதிப்பான்.

அற்புதங்களைப் பிசாசும் செய்வான் (2 கொரி. 11:13-15; வெளி. 16:13-14). அவனுடைய மனிதர்களும் அற்புதங்கள் செய்வார்கள் (மத். 7:22; 24:24). இவர்களது கூட்டங்களில் அற்புதங்கள் ஏராளமாக நடைபெறும் ஆனால் யாரும் இரட்சிக்கப்படமாட்டார்கள்.

அற்புத அடையாளங்கள் ஊழியமல்ல ஆனால் அவைகள் ஊழியத்தின் ஒரு பகுதியாகும். நிருபங்களை வாசிப்போமானால் எந்த ஒரு அப்போஸ்தலனும் அற்புத அடையாளங்களை முக்கியப்படுத்தி எழுதியுள்ளதைக் காணமுடியாது. பரிசுத்தம், தேவசித்தம் செய்தல், அன்பு, ஆவிக்குரிய பெலனடைதல் சாட்சியுள்ள வாழ்க்கை போன்றவைகளை முக்கியப்படுத்தி எழுதியிருப்பார்கள். அற்புத அடையாளங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இரட்சிப்பையும் பரிசுத்த வாழ்வையும் அசட்டைசெய்வது பிசாசின் உபதேசமாகும்.

* * *

அதிகாரம் 4

அப்பொழுது அவன் அவரை எருசலேமுக்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இங்கேயிருந்து தாழக்குதியும். ஏனெனில், உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார் என்றும்,உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள் என்றும், எழுதியிருக்கிறது என்று சொன்னான். லூக். 4:9-11

வேத வசனங்களைப் புரட்டி அவைகளின் அர்த்தத்தை அப்படியே மாற்றுவதில் பிசாசுக்கு பெரும் பங்குண்டு. தேவ ஜனத்தைக் குழப்பி தேவனுடைய சித்தத்திற்கு எதிராக செயல்பட வைப்பதற்கு பிசாசு இந்த வழிமுறையை அதிகமாகப் பயன்படுத்திவருகிறான். கிறிஸ்து வேதவசனங்களைப் பேசியபோது தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவே பேசினார் (மத். 22:16). சுய நன்மைக்காக வசனங்களைப் புரட்டவோ, கூட்டவோ, குறைக்கவோயில்லை. ஆனால், பிசாசின் உபதேசமானது அப்படியல்ல. வேத வசனங்களைத் தவறாக விளக்குவான்.

பிசாசுக்கு தனி வேதாகமம் இல்லையென்பதை முதலில் அறியவேண்டும். விசுவாசிகள் பயன்படுத்துகிற அதே வேதாகம வசனங்களையே அவனும் பயன்படுத்துவான். இயேசுவை சோதித்தபோதும் வேத வசனங்களைச் சுட்டிக்காண்பித்தே பேசினான். தேவகுமாரனாகிய இயேசுவிடமே வேத வசனங்களைப் புரட்டிப்பேசியவன் விசுவாசிகளை விட்டுவைப்பானா? வேத

வசனங்களைப் பேசும் ஊழியர்கள் எல்லாருமே தேவனுடைய ஊழியர்கள் என எண்ணி ஏமாறக்கூடாது. யேகோவா சாட்சியினரும் வேத வசனங்களை வைத்தே பேசுகிறார்கள். ஆனால் புரட்டுகிறார்கள்.

ஊழியர்களின் மூலமாகப் பேசுவது பரிசுத்தஆவியானவரா அல்லது பிசாசின் ஆவியா என்பதை நன்றாக சோதித்துப்பார்க்கவேண்டும் (1 யோவான். 4:1). அவர்கள் பேசுகிற வார்த்தைகளின் விளக்கம் சரியானதா என்பதையும் சோதித்துப் பார்க்கவேண்டும் (அப். 17:11; ஏசா. 8:20; 2 தெச. 2:2). விசுவாசிகள் வேதத்தை நன்றாகக் கற்றால் ஒழிய உண்மையான உபதேசத்தையும் பிசாசின் உபதேசத்தையும் அடையாளம் காணமுடியாது. உலகெங்கிலும் உள்ள ஊழியர்களில் அநேகர் வேத வசனங்களைத்தான் போதிக்கிறார்கள். ஆனால், எத்தனைபேர் வேதத்தை முறைப்படிக் கற்று சரியான விதத்தில் வசனங்களைப் பேசுகிறார்கள்?

அநேகர் வேத வசனங்களை அவரவருடைய விருப்பங்களுக்கும் இலாபத்திற்கும் ஏற்றபடி மாற்றிக்கொள்கிறார்கள். தங்களை மாற்றவேண்டிய வேத வசனங்களை அவர்கள் மாற்றிவிடுகிறார்கள். வேத வசனங்களைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்பது பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்தே கொடுக்கப்பட்ட தேவனுடைய எச்சரிப்பாகும் (உபா. 4:2; 12:32; நீதி. 30:6; எரே. 26:2). வேத வசனங்களைப் புரட்டுவது பிசாசு மற்றும் அவனது மனிதர்களின் செயலாகும். உண்மையான ஊழியர்களும் வேத அறிவின்மையால் வேத வசனங்களைப் புரட்டக்கூடும். ஆனால் பிசாசும் அவனது மனிதர்களும் மனப்பூர்வமாகப் புரட்டுவார்கள் (அப். 13:6-12).

இயேசுவிடம் பிசாசு வேத வசனத்தையே பேசினான். ஆனால் தவறான விளக்கத்தைக் கொடுத்தான். விசுவாசிகள் இடறாதபடிக்கு தேவதூதர்கள் தங்களது கரங்களில் ஏந்திக்கொண்டு போவார்கள் (சங். 91:11-12). உயரத்திலிருந்து

மனப்பூர்வமாகக் குதித்தால் காப்பாற்றமாட்டார்கள். ஆனால், இயேசுவைக் குதிக்கும்படி பிசாசு கூறினான். இயேசு அப்படிக் குதித்திருப்பாரானால் என்ன நடந்திருக்கும்? தேவனைப் பரீட்சை பார்ப்பதுபோல் ஆகியிருக்கும். சாதாரண விசுவாசிகளைத் தூண்டிவிட்டு தேவனுக்குப் பிரியமில்லாத காரியத்தைக் கேட்கவைப்பான். ஆனால், அப்படிப்பட்ட ஜெபத்திற்கு தேவன் பதில் தரமாட்டார் (1 யோவான். 5:14).

இப்படிப்பட்ட வேளையில் பிசாசு என்ன கூறுவான்? இயேசு உண்மையானவரானால் அல்லது உண்மையிலேயே உன்னை நேசிப்பவரானால் உன் ஜெபத்திற்குப் பதில் கொடுத்திருப்பாரல்லவா என்ற கேள்வியை எழுப்பி விசுவாசியை விசுவாசத்தில் இடறப்பண்ணுவான். இப்படி வஞ்சிக்கப்பட்டவர்கள் ஏராளம். தவறான உபதேசங்களும் ஊழியங்களும் பெருகுவதற்கு காரணம் பிசாசின் வேதப்புரட்டாகும். வேத வசனங்களை சரியாகக் கற்றுக்கொள்ளாதவர்கள் பிசாசின் இப்படிப்பட்ட புரட்டை நம்பி ஏமாறுகிறார்கள். சாத்தானின் இப்படிப்பட்ட வேத புரட்டினால் என்ன நடக்கும்?. வேத வசனங்களின் உண்மையான அர்த்தங்களையும் அவைகளில் மறைந்துள்ள தேவனுடைய நோக்கம் மற்றும் சித்தம் போன்றவைகளையும் விட்டுவிலகி பிசாசின் தவறான உபதேசத்தில் மூழ்கவேண்டியிருக்கும் (2 தீமோ. 4:4). வேதப் புரட்டர்களை அடையாளம் கண்டு அப்படிப்பட்டவர்களை விட்டுவிலகுவது மிகவும் நல்லது. வேதமும் அப்படியே போதிக்கிறதல்லவா? (தீத்து. 3:10-11).

* * *

அதிகாரம் 5

இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள், கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது, அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். மத். 7:13-14

சுவிசேஷமானது நித்திய ஜீவனுக்கான வழிகாட்டியாகும். ஒவ்வொரு விசுவாசியும் நித்திய ஜீவனை அடையவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகும். நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கும் பாதையானது எவ்வகையான பாதை என்பதை இயேசு தெளிவாகக் கூறியுள்ளார். இருபாதைகள் இருவிதமான இடங்களுக்கு மனிதர்களைக் கொண்டுசெல்லும் என்பதை இயேசுவின் உபதேசத்திலிருந்து அறியலாம். நெருக்கமான பாதை விசாலமான பாதை என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகள் அல்ல இரண்டும் எதிர்மறையானவைகள். ஏதாவது ஒன்றின் வழியாக மட்டுமே நடந்துசெல்ல முடியும்.

மனிதர்கள் நடப்பதற்கும் வாகனங்களை ஓட்டுவதற்கும் எப்போதுமே விசாலமான பாதைகளைத் தெரிந்துகொள்வதையும் விரும்புவதையும், மிகப்பெரிய பட்டணங்களில் வாகன நெரிசல் ஏற்படும்போது மக்கள் மிகவும் அவதிப்படுவதையும் காண்கிறோம். விசாலமான பாதை அல்லது சாலை இருக்குமாயின் வேகமாக செல்லலாமே என அனைவரும் விரும்புவதுண்டு. இடுக்கமான பாதை மற்றும் சாலையை ஒருவரும் விரும்புவதில்லை.

விசாலமான வாசல் என்பது மனிதர்களின் சுய விருப்பங்களையும் இடுக்கமான வாசல் என்பது தேவனுடைய விருப்பங்களையும் வெளிப்படுத்துகிறது. விசாலமான வாசலானது கட்டுப்பாடற்ற ஒன்றாகும். இடுக்கமான வாசலானது கட்டுப்பாடு நிறைந்த ஒன்றாகும். கட்டுப்பாடான வாழ்க்கையை விரும்புவோர் அதிகம் இல்லையே. விசுவாசிகள் எல்லாரும் மனப்பூர்வமாகத் துன்பங்களை அனுபவித்து பரலோகம் செல்லவேண்டும் என்ற அர்த்தத்தில் இயேசு கூறவில்லை. இடுக்கமான வாசலை நாம் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. ஆனால், இயேசுவை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, இந்த உலகில் இதுவரையிலும் நாம் நடந்துவந்த விசாலமான வாசல்கள் அனைத்துமே ஒவ்வொன்றாக அடைபடும்.

தேவனுக்குப் பிரியமானவைகளை மட்டுமே நாம் செய்யும்போது, இந்த பூமியில் உள்ள உலகத்தாரால் நாம் வெறுக்கப்படுவோம். எப்படியெனில், ஒருவன் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஜீவனுக்கான வழியில் நடக்கும்போது அநீதியை வெறுப்பான். நேர்மையான வாழ்க்கையை விரும்புவான். ஆனால், அநீதியில் பிரியப்படுகிறவர்களால் குடும்பத்திலும், அலுவலகத்திலும், சமுதாயத்திலும் வெறுக்கப்படுவான். அவனது எல்லையானது மிகவும் குறுகிப்போம். கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்பவர்களைக் கட்டுப்பாடற்றவர்கள் வெறுப்பார்கள். விசுவாசி தேவ சித்தம் செய்யும்போது இந்த பூமியில் அவனது வாழ்க்கையானது இடுக்கம் நிறைந்ததாகவே காணப்படும். ஆனால் பரலோகில் செல்லும்போது விசாலமான வாழ்க்கை அவனுக்குக் கிடைக்கும்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது மனம்போன போக்கிலும் நமது விருப்பப்படியும் வாழும் விசாலமான வாழ்க்கை அல்ல. அது கட்டுப்பாடான வாழ்க்கையாகும். இயேசுவை ஏற்றுக்கொள்ளாதோர் எப்படிவேண்டுமானாலும் வாழலாம்.

விசாலமான வாசலானது அநேகர் செல்லக்கூடியதாகும். இடுக்கமான வாசலானது வெகு சிலரை மட்டுமே உள்ளே

பிரவேசிக்கச்செய்யும். பரலோகம் செல்லுகிறவர்கள் வெகு சிலரே என்பதையும் இயேசு இங்கு கூறுகிறார். உலகில் உள்ள அனைவரும் பரலோகம் செல்ல இயலாது என்பதை இந்த வசனங்கள் (மத். 7:13-14) தெளிவாகக் கூறுகின்றது.

பிசாசு போதிக்கும் வாசலானது மிகவும் விசாலாமான ஒன்றாகும். இந்த பூமியில் தேவன் படைத்துள்ள அனைத்துமே மனிதர்கள் அனுபவிக்கத்தான். ஆகவே, எப்படி வேண்டுமானாலும் வாழலாம். எல்லாவற்றையும் அனுபவிக்கலாம். சந்தர்ப்பம் கிடைக்கும்போது அனுபவிக்காமல் வாழ்வது மூடத்தனமான ஒன்று என்றெல்லாம் பிசாசு போதிப்பான். உலகத்தில் நமது வாழ்க்கையானது எல்லாவற்றையும் ருசித்து வாழ்வதற்கே எனப் போதிப்பான். இரட்சிக்கப்பட்டவர்கள் சகலத்தையும் ஆசீர்வாதமாக மாற்றி இன்பமான வாழ்க்கை வாழலாம் என்றும், இயேசு எனக்காகப் பாடுபட்டார் ஆகவே, இனி நான் பாடுகளை அல்ல இன்பத்தையே அனுபவிப்பேன் என்று விசுவாசிகள் எண்ணும்படியாகவும் போதிப்பான்.

இயேசு நமது பாவபாரத்தை சுமந்தது உண்மைதான். ஆனால், உலகத்தில் உள்ள மற்ற பாரங்களை அவர் சுமந்து தீர்க்கவில்லை. அப்படியிருக்குமேயானால், நாம் இன்று வேலை செய்யவோ, வியாதியினால் வருந்தவோ அவசியமில்லையே. இந்த பூமியில் உபத்திரவம் உண்டு என்பதை இயேசு வெளிப்படையாகக் கூறியுள்ளாரல்லவா? (யோவான். 16:33). பிசாசின் போதனை அப்படியல்ல. விசுவாசிகள் இனி பாடுபடவேண்டிய அவசியமில்லை என்றும் எல்லாவற்றையும் அனுபவித்து வாழலாம் என்றும் பிசாசு போதிப்பான். இடுக்கமான வாசல் விசுவாசிகளுக்குத் தேவையில்லை என்பது அவனது அறிவுரை ஆகும். இந்த பூமியில் உள்ளவரை நமக்குப் போராட்டங்கள் உண்டு என்பதை நாம் மறக்கக்கூடாது (எபே. 6:12; பிலி. 1:29; 1 தெச. 3:1-4; 1 பேது. 4:19).

பிசாசின் உபதேசமானது மேற்கூறியுள்ள வசனங்கள்

அனைத்திற்கும் எதிரானவைகளாக இருக்கும். இடுக்கமான வாசலைவிட விசாலமான வாசலைத் தெரிந்துகொள்ளும் உபதேசமானது இன்று உலகம் முழுவதிலும் பரவிவருகிறது. கிறிஸ்தவர்கள் ராஜாவின் பிள்ளைகள். ஆகவே அவர்கள் பாடுகளைவிட்டு விலகி சுகபோகமாக வாழலாம் என்பது இன்றைய முக்கியமான உபதேசமாகக் கருதப்படுகிறது.

பெர்கமு சபையில் இருந்த விசுவாசிகளில் சிலர் நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தைக் கைக்கொண்டு தேவனுடைய வெறுப்பை சம்பாதித்ததாக வாசிக்கிறோம் (வெளி. 2:12-16). இந்த நிக்கொலாய் மதஸ்தினர் என்ன போதித்தார்கள்? இரட்சிக்கப்பட்டவர்களுக்குப் பரலோகம் நிச்சயம். ஆகவே, இந்த பூமியில் உள்ள அனைத்துவிதமான பாவங்களையும் அனுபவித்து வாழலாம் எனப் போதித்தார்கள். இதுதான் விசாலமான போதனையாகும். இன்றும் பிசாசு இப்படிப்பட்ட உபதேசங்களால் அநேக ஊழியர்களையும் விசுவாசிகளையும் தன்வசம் இழுத்துக்கொண்டிருக்கிறான். பணம், இன்பமான வாழ்க்கை போன்றவைகளை விரும்பும் அனைவரும் பிசாசின் இந்த உபதேசங்களுக்கு இடங்கொடுத்து தேவனுக்குத் துரோகம் செய்கிறார்கள்.

* * *

பகுதி 3

மனிதர்களின் உபதேசங்கள்

அதிகாரம் - 1

மனிதர்களின் உபதேசத்தின் இயல்புகள்

மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார். மத். 15:9 (மாற். 7:7)

மனிதர்கள் தங்களது பாரம்பரிய அடிப்படையில் தங்களுக்காக உருவாக்கிக்கொண்ட உபதேசங்கள் மோசேயின் நியாயப்பிரமாணம் வருவதற்கு முன்பே காாணப்பட்டது. ஆனால், மோசேயின் நியாயப்பிரமாணம் தேவனால் கொடுக்கப்பட்டிருந்தது. அப்படி தேவனால் கொடுக்கப்பட்டிருந்த நியாயப்பிரமாண உபதேசங்கள் அனைத்தையும் யூதர்கள் தங்களுக்கு சாதகமாக மாற்றி அவைகளுக்கு "முன்னோர்களின் பாரம்பரியம்" எனப்பெயரிட்டார்கள் (மத். 15:2). யூதர்களால் உருவாக்கப்பட்டிருந்த இந்த பாரம்பரிய சட்டதிட்டங்கள் **Halaka, Mishna** என அழைக்கப்பட்டது. மோசேயின் மூலமாக தேவன் கொடுத்த கட்டளை 10, சட்டதிட்டங்கள் 613 ஆக மொத்தம் 623. இவை அனைத்தையும் விட்டு தங்களுக்காக யூதர்கள் சொந்தமான பாரம்பரிய சட்டங்களை உருவாக்கிக்கொண்டார்கள் (மாற். 7:1-4).

மோசேயின் நியாயப்பிரமாணங்களைவிட தங்களது பாரம்பரியத்தைக் கடைப்பிடித்துவந்தார்கள். தேவனுடைய நியாயப்பிரமாணங்களைவிட தங்களது பாரம்பரிய நியாயங்களின்மேல் வைராக்கியம் உடையவர்களாயிருந்தார்கள். முன்னோர்களின் பாரம்பரியங்களை இயேசு மீறுவதாக எண்ணி

அவரைப் பலமுறை எதிர்த்தார்கள். தன்னுடைய பிதாக்களின் பாரம்பரிய நியாயங்களில் மிகவும் பக்தி வைராக்கியமுள்ளவனாக இருந்ததாகப் பவுல் கூறினான் (கலா. 1:14). முன்னோர்களின் வீணான பாரம்பரிய நடத்தை என பேதுரு கூறியுள்ளான் (1 பேது. 1:18).

கமாலியேலின் பாதத்தருகே அமர்ந்து கற்றவன்தான் பவுல். ஆனால் தேவனுடைய நீதிநியாயங்களை கவனியாமல் முன்னோர்களின் பாரம்பரியங்களில் வைராக்கியமுள்ளவனாக இருந்தான். தேவனுடைய நீதிநியாயங்களைவிட "யூதர்கள்" என்ற ஜாதிப்பெருமையினாலும் தாங்கள் மட்டுமே ஆபிரகாமின் சந்ததியார் என்ற வீண்பெருமையினாலும் (மத். 3:9; யோவான். 8:9) தேவனுடைய கட்டளைகளை மீறி வாழ்ந்துவந்தார்கள். யூதர்களின் இப்படிப்பட்டதான உபதேசங்களை இயேசு வன்மையாகக் கண்டித்தார் (மாற். 7:8-9; மத். 15:3).

இயேசு உள்ளான பரிசுத்தத்தைக்குறித்துப் போதித்தார் (மத். 15:9-20). ஆனால் யூதர்கள் வெளிப்புறமான பரிசுத்தத்தையே வலியுறுத்திப்போதித்தார்கன். இன்றும்கூட இப்படிப்பட்ட சொந்த பாரம்பரிய உபதேசங்களை உருவாக்கி தேவனுடைய கட்டளைகளையும் உபதேசங்களையும் மீறுகிற அநேக சபைகளும் போதகர்களும் இருக்கிறார்கள். ஒவ்வொரு சபையினரும் ஒவ்வொரு பாரம்பரிய நியாயங்களைக் கடைப்பிடிப்பதில் வைராக்கியமாக உள்ளனர். தேவனுடைய உபதேசங்களைக் குறித்து கவலையில்லை.

வேதம் கூறுகிற உபதேசங்களைத் தள்ளிவிட்டு தங்கள் சொந்த நீதி நியாயங்களில் வீண்பெருமை கொள்ளுகிறார்கள். தலைமைப் போதகர் அல்லது தலைமை சபை என்ன கூறுகிறதோ அதையே உபதேசமாக மாற்றி தேவனுடைய வசனங்களைப் புறக்கணிக்கிறார்கள். தலைமையில் உள்ளவர்களை மீற முடியாததால் அவர்கள் கூறும் உபதேசங்களைக் கடவுள் வாக்காக எண்ணுகிறார்கள். இப்படிப்பட்டவைகளை மனிதர்களின்

பாரம்பரியம் மற்றும் உலக வழிபாடுகள் எனப் பவுல் குறிப்பிடுகிறார் (கொலோ. 2:8). தேவனுடைய உண்மையான ஊழியன் தேவனுடைய உபதேசங்களை மட்டுமே ஜனங்களுக்குக் கூறுவான்.

சபையின்மேல் உள்ள வீணான வைராக்கியத்திற்காக சுயமான உபதேசங்களை உருவாக்கி வேதவசனங்களை மீறுவது மிகவும் ஆபத்தான ஒன்று (மத். 5:19) தேவனுடைய வசனம் என்ன கூறுகிறதோ அப்படியே போதிக்கவேண்டும். சபை, ஸ்தாபனம் போன்றவைகளுக்காக தேவனுடைய வசனங்களை மாற்றிப் போதிக்கக்கூடாது. இயேசு நியாயப்பிரமாணங்களின் முடிவாக இருந்து நியாயப்பிரமாணங்களின் அனைத்து சாபங்களிலிருந்தும் விசுவாசிகளை மீட்டுக்கொண்டுள்ளார் (கலா. 3:13) என்ற சத்தியத்தை உணராமல், முன்னோர்கள் கடைப்பிடித்துவந்த விருத்தசேதனத்தைக் கைக்கொள்ளும்படி தவறாகப் போதித்த யூதர்களும் இருந்தார்கள். இப்படிப்பட்டவர்களை சுட்டிக்காண்பிக்கும்படியாகவே கலாத்தியர் நிருபத்தை பவுல் எழுதினார்.

* * *

அதிகாரம் - 2

உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். அப். 20:30

பவுல் கூறின மிக அற்புதமான ஒரு எச்சரிப்பாக இது அமைந்துள்ளது. சபைகளில் சிலர் எழும்பி சீஷர்களைத் (விசுவாசிகளை) தங்களிடம் இருந்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளை உபதேசிப்பார்கள். விசுவாசிகளை இயேசுவிடம் திருப்பவேண்டும், ஆனால் மனிதர்கள் தங்கள் வசமாக அவர்களை இழுத்துக்கொள்ள முயற்சிப்பார்கள், இப்படிப்பட்டவர்கள் வேத வசனத்திலிருந்துதான் பேசுவார்கள். ஆனால், வேதவசனங்களின் கருத்துக்களை அப்படியே மாற்றிப் பேசுவார்கள். வேத அறிவற்ற ஜனங்கள் அதை அப்படியே நம்புவார்கள்.

ஜனங்களைத் தங்கள் வசமாகத் திருப்பிக்கொள்ள இவர்கள் பயன்படுத்தும் வார்த்தைகள் தந்திரம் நிறைந்தவைகளாக இருக்கும் (2 பேது. 2:3). காரணம் கடிந்துகொளள்ளுதலைவிட ஆறுதலான வார்த்தைகளையும் உற்சாகமான வார்த்தைகளையுமே ஜனங்கள் விரும்புவார்கள் (ஏசா. 30:9-10; 2 தீமோ. 4:3). ஜனங்களின் இப்படிப்பட்ட பெலவீனத்தைப் பயன்படுத்தி வஞ்சகமும் தந்திரமும் நிறைந்த உபதேசங்களைப் போதிப்பார்கள். இப்படிப்பட்ட வஞ்சகமான வார்த்தைகளைக் கூறிப் போதிப்பவர்களைக்குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என பவுல் எச்சரித்துள்ளார் (கொலோ. 2:8). உண்மையான ஊழியர்கள் அப்படிப்பட்ட வஞ்சகமான வார்த்தைகளை உபதேசிக்கமாட்டார்கள் (1 கொரி. 2:5-6; 2 கொரி. 4:2).

இப்படிப்பட்ட வஞ்சகமான வார்த்தைகளைப் போதித்து

தேவனுடைய வசனங்களின் சரியான விளக்கத்தை மாற்றி தங்களது கருத்துக்களை வசனங்களோடு இணைப்பதற்கான காரணம் என்ன? இழிவான ஆதாயத்தை நாடுவதே இதன் காரணமாகும், கிறிஸ்தவத்தை ஆதாயத் தொழிலாக எண்ணுபவர்கள் இவ்வாறு மாறுபாடானவைகளைப் போதித்து ஜனங்களை ஏமாற்றுவார்கள் (ரோம. 16:17-18; 1 தீமோ. 6:5; தீத்து. 1:10-11). ஜனங்களிடமிருந்து பணத்தை வசூலிப்பதற்காக இவர்கள் பேசும் வஞ்சனையான வார்த்தைகள் சாத்தானுடைய வஞ்சனையான வார்த்தைகளைவிட இனிமையாக இருக்கும். எந்த வார்த்தைகளைப் பேசினால் ஜனங்கள் மயங்குவார்கள் என்பதை நன்றாக அறிந்து வைத்திருப்பார்கள். வேதபாரகரும் பரிசேயரும் இப்படிப்பட்ட வஞ்சனையான வார்த்தைகளைப் பேசி ஜனங்களை வஞ்சித்து வந்ததை இயேசு கண்டித்தார் (மத். 23:14).

ஜனங்களுக்கு மாறுபாடானவைகளை உபதேசித்து அவர்களைத் தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள இவர்கள் பயன்படுத்தம் ராஜ தந்திரம் என்ன? ஜனங்களை வேத அறிவில் வளரவிடமாட்டார்கள், தேவ ஜனம் தேவனையும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவிலும் வளரவேண்டும் என்பது தேவனுடைய கட்டளையாகும் (யோவான். 17:3; கொலோ. 1:9-10; எபே. 4:15; 1 பேது 2:3). ஆனால் விசுவாசிகள் வேத அறிவில் வளர்வது இப்படிப்பட்ட வஞ்சகமான வார்த்தைகளைப் பேசும் கள்ள ஊழியர்களுக்கு விருப்பமில்லை.

கொத்தடிமைகளை வைத்து தொழில் செய்பவர்கள் அந்தக் கொத்தடிமைகள் கல்வி அறிவிலும் உலக அறிவிலும் வளராதபடிக்கு அவர்களை மிகவும் கவனமாகப் பார்த்துக்கொள்வார்கள். அவர்களது அடுத்த தலைமுறையான அவர்களது பிள்ளைகளும் தங்களிடம் கொத்தடிமைகளாக இருக்கும்படி அந்தப் பிள்ளைகளையும் கல்வி கற்க அனுமதிக்கமாட்டார்கள். அவர்களது மரணம் வரையிலும் தங்களது கட்டுப்பாட்டிற்குள்ளேயே வைத்திருப்பார்கள். காரணம், தங்கள் சுய இலாபத்திற்காக. இதுபோலவே தேவனால் அழைக்கப்படாத

வஞ்சனையான ஊழியர்களும் ஜனங்களை வேத அறிவில் வளரவிடுவதில்லை. காரணம், விசுவாசிகள் வேத அறிவில் வளர்ந்தால் தங்களது வருமானம் பாதிக்கப்படும் என்பதை நன்றாக அறிவார்கள். ஆகவே எப்போதும் விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் குழந்தைகளாக இருக்கும்படி பார்த்துக்கொள்வார்கள் (1 கொரி. 3:1-3; எபி. 5:12-14).

இப்படிப்பட்ட உபதேசம் செய்கிறவர்களைக்குறித்து வேதம் என்ன கூறுகிறது? இப்படிப்பட்டவர்களின் உபதேசங்கள் பல விதங்களில் வரும். அதைப் பலவிதமான உபதேசம் என வேதம் அழைக்கிறது (எபே. 4:14). இப்படிப்பட்டவர்களை வேத அறிவினால் மட்டுமே அடையாளம் காணமுடியும். தங்களை தேவனிடம் நடத்துகிறார்களா அல்லது தங்களுக்கு நேராக நடத்துகிறார்களா என்பதை அறிந்து அவர்களை விட்டு விலகவேண்டும் (எபே. 4:15; 1 தீமோ. 6:5). காணிக்கை மற்றும் தசமபாகங்களை ஜனங்கள் தங்களது அன்பின் அடையாளமாக தேவனுக்குக் கொடுக்கவேண்டும் (2 கொரி. 8:8; 9:7).

நான் காணிக்கை மற்றும் தசமபாகம் கொடுப்பதால் தேவன் என்னை ஆசீர்வதித்து பல மடங்காகத் திரும்பத் தருவார் என நினைத்துக் கொடுப்பது உண்மையான அன்பாக இருக்காது. தேவனுடைய ஆசீர்வாதத்தை விலை கொடுத்து வாங்குவது போலாகிவிடும். எதிர்பார்த்துக் கொடுப்பது உண்மையான அன்பல்ல. தேவன் எனக்கு கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நான் எனது காணிக்கை மற்றும் தசமபாகத்தைக் கொடுப்பேன் என எண்ணிக் கொடுக்கவேண்டும்.

ஆனால், வஞ்சனையான மனிதர்களின் தந்திரமான உபதேசம் என்ன கூறும்? காணிக்கை தசமபாகம் கொடுப்பவர்களை தேவன் அதிகமாக ஆசீர்வதித்து பலமடங்காகத் திரும்பத்தருவார் எனப் போதிப்பார்கள். அதற்காகப் பலவிதமான சாட்சிகளையும் கூறவைப்பார்கள். இப்படிப்பட்ட போதனை செய்கிறவர்கள் தேவனுடைய ஊழியத்திற்காகப் பணம் சேர்க்காமல் தங்களது சொந்த

வளர்ச்சிக்காக இப்படிப்பட்ட போதனையை செய்வார்கள். இப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களைவிட்டு விலகுவது நல்லது. வேதவசனங்களில் உறுதியற்றவர்கள் நிச்சயம் ஏமாறுவார்கள். பிசாசின் வஞ்சனையான வார்த்தைகள் ஏவாளுக்கு இனிமையாகத் தோன்றியது. ஆனால் வஞ்சிக்கப்பட்ட பின்புதான் பிசாசின் தந்திரத்தை உணர்ந்தாள் (ஆதி. 3:13).

* * *

அதிகாரம் 3

எல்லா நிருபங்களிலும் இவைகளைக் குறித்துப் பேசியிருக்கிறான், அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது, கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்.
2 பேது. 3:16

மனிதர்களின் தவறான உபதேசத்திற்கான மற்றொரு காரணம் அறியாமை ஆகும். தேவனால் அழைக்கப்பட்ட ஊழியர்களானாலும் எல்லாருமே சரியாக உபதேசிப்பார்கள் என எண்ணக்கூடாது. அழைப்பும் வேத அறிவும் வெவ்வேறானவைகள். தேவனுடைய அழைப்பைப் பெறுவதற்கு வேத அறிவு தேவையில்லை. சத்தியத்தை அறிந்தால் போதுமானது. தேவன் எந்த மனிதனையும் வேத அறிவின் அடிப்படையில் அழைக்கிறவர் அல்ல. ஆனால், அழைப்பைப் பெற்றவர்கள் வேத அறிவில் வளரவேண்டும் என தேவன் விரும்புகிறார். சீஷர்களை இயேசு அழைத்தபோது அவர்கள் வேத அறிவில்லாதவர்களாகவே இருந்தார்கள். ஆனால், அதன் பின்பு மூன்றரை ஆண்டுகள் இயேசு அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். அதன் பின்பு உயிர்த்தெழுந்து நாற்பது நாட்கள் சீஷர்களுக்குப் பலவித காரியங்களைக் கற்றுக்கொடுத்தார்.

தேவனுடைய அழைப்பைப் பெற்று ஊழியனாக மாறினபின்பு அது போதும் என எண்ணி, வேதத்தைக் கற்றுக்கொள்ளாமல் இருப்பது ஆபத்தான ஒன்றாகும். அழைப்பைப் பெற்றபின்பு வேதத்தை அதிகமாக நேசித்து அனுதினமும் இரவும் பகலும் அதை தியானிக்க வேண்டும் (உபா. 6:6-9; யோசு. 1:7-8; சங்.

1:2; 1 தீமோ. 4:13). வேதத்தை சரியாகக் கற்றுக்கொள்ளாமல் ஊழியத்தை செய்வது ஆபத்தில் முடிவடைய வாய்ப்புள்ளது. தேவனுடைய அழைப்பைப் பெற்றும் தவறான உபதேசங்களுக்கு செவிகொடுத்து சத்தியத்தை விட்டு விலகின அநேக ஊழியர்கள் உண்டு. இவர்களது பின்னனியைப் பார்த்தால் வேதத்தை சரியாகக் கற்றுக்கொள்ளாதவர்களாக இருப்பார்கள். வேதத்தை சரியாகக் கற்று அதன் சரியான விளக்கத்தைக் கூறாமல் தவறான விளக்கங்களைக் கொடுப்போர் இன்று ஏராளம். இப்படிப்பட்டவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள் (யாக். 3:1).

பழைய ஏற்பாட்டு யூதர்கள் நியாயப்பிரமாணங்களை சரிவரக் கற்றுக்கொள்ளாமலேயே போதகராக இருந்தார்கள். தாங்கள் என்ன போதிக்கிறார்கள் என்பதையே அறியாதிருந்தார்கள் (1 தீமோ. 1:7). நியாயப்பிரமாணங்களின் உள்ளான கருத்துக்களை சரியாகக் கற்றுக்கொள்ளாமல் தவறான விளக்கங்களைக் கொடுத்து வந்தார்கள். இதனால் தேவனுடைய நோக்கம் மற்றும் சித்தத்தை அறியாமற்போனார்கள். இன்றைய சபைகளிலும் இப்படிப்பட்ட ஊழியர்களை அதிகமாகக் காணலாம். வேதத்தை வாசிக்கவோ, தியானிக்கவோ விருப்பமின்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக வசனங்களை எடுத்து அவைகளைத் தவறான விதத்தில் விளக்குகிறார்கள்.

இதைத்தான் பேதுரு "கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும்" எனக் கூறுகிறார் (2 பேது. 3:16). கல்லாதவர்கள் என்றால் கல்வி கல்லாதவர்கள் அல்ல வேதத்தைக் கல்லாதவர்கள். உறுதியில்லாதவர்கள் என்றால் வேத வசனங்களில் மறைந்துள்ள தேவனுடைய சரியான நோக்கங்களை அறிந்து அதை உறுதிசெய்யாமல் தங்களது சொந்த விளக்கங்களைக் கொடுப்பவர்கள். இவர்கள் தேவனுடைய வசனங்களில் மறைந்துள்ள ஆழமான சத்தியங்களை ஆராய்ந்து பார்க்காமல் மேலோட்டமாக வாசித்து தவறான விளக்கம் கொடுப்பவர்களாவர்.

இப்படி வசனங்களின் அர்த்தங்களைப் புரட்டுகிறவர்கள் தங்களுக்கு ஆக்கினையை வருவிப்பார்கள் (2 பேது. 3:16). வேத வசனங்களின் அர்த்தங்களைப் புரட்டும் இடத்தில் பிசாசு அதிகமாக கிரியை செய்வான். ஜனங்கள் சத்தியத்தைவிட்டு விலகுவதற்கு அது வழி வகுக்கும். தேவனுடைய சித்தத்தை அறிந்து அதைச் செய்ய இயலாதபடிக்கு தவறான விளக்கமானது விசுவாசியைத் தடுக்கும். தவறான விளக்கமானது விசுவாசிகளைக் கனியற்றவர்களாக மாற்றும். துணிகரமான பாவங்களில் விழப்பண்ணும். தேவையற்ற பயங்கள், குழப்பங்கள், அவிசுவாசம் போன்றவைகளையும் விசுவாசிகளில் ஏற்படுத்தி முதிர்ச்சயற்றவர்களாய் மாற்றும்.

பிசாசைக் கட்டுதல், ஆவிக்குரிய வரங்களைக் குறித்ததான தவறான விளக்கங்கள், இரட்சிக்கப்பட்டவர்களை அவர்களது பெற்றோரின் சாபங்கள் தொடரும் போன்ற தவறான உபதேசங்கள் யாவுமே வேதத்தை சரியாகக் கற்றுக்கொள்ளாத ஊழியர்களால் வருகிறவைகளாகும். வேதத்தை சரியாகக் கற்றுக்கொள்ளாத ஊழியர்களின் உபதேசத்திலும் பிரசங்கத்திலும் தவறுகள் இருப்பது உறுதி. வேதத்தை பரிசுத்தஆவியானவரின் உதவியோடும் அவரால் பயன்படுத்தப்படுகிற வேத பண்டிதர்கள் மூலமாகவும் கற்றுக் கொள்ளுதல் மிகவும் அவசியம். எனக்கு எல்லாமே தெரியும் என நினைப்பது மிகவும் ஆபத்தான ஒன்று.

வேதப்புரட்டு என்பது உண்மையான ஊழியர்களிடமும் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. வேதத்தை சரிவரக் கற்றுக்கொள்ளாவிட்டால் நிச்சயமாக தவறு ஏற்படும். முறைப்படியான வேத அறிவு இல்லாமல் ஊழியம் செய்கிற ஊழியர்கள்தான் இன்று ஏராளமானோர். பரிசுத்தஆவியானவர் பார்த்துக்கொள்வார், கிருபையில் ஊழியம் செய்கிறோம் என்றெல்லாம் சாக்குப்போக்குக் கூறி வேதத்தைக் கற்றுக்கொள்ளாமல் இருப்பது நல்லதல்ல. வேத வசனங்களைத் தந்தவரே பரிசுத்தஆவியானவர்தான் (2 தீமோ. 3:16). வேத

வசனங்களின் உதவியின்றி பரிசுத்தஆவியானவரே எல்லாவற்றையும் போதிப்பார் என எண்ணுவது சரியானால் வேதாகமத்தை தேவன் தந்திருக்கமாட்டாரல்லவா?

பரிசுத்தஆவியானவரும் வேத வசனங்களை எடுத்தே போதிப்பார் என்பதை மறக்கக்கூடாது (யோவான். 16:13-15). அனுதினமும் குறைந்தபட்சம் ஐந்து மணிநேரமாவது வேதத்தைக் கற்றுக்கொள்ளாத ஊழியன் வேதத்தைச் சரியாக போதிப்பவனாக இருக்க முடியாது. லட்சகணக்கான ஜனங்களின் மத்தியில் பேசுபவர்கள் அனைவருமே வேத அறிவு உள்ள ஊழியர்கள் என எண்ணக்கூடாது. அதிகமான ஜனங்களின் மத்தியில் பேசுவதற்கு வேத அறிவு தேவையில்லை கவர்ச்சிகரமான பிரசங்கம் செய்தாலே கோடிக்கணக்கான ஜனங்கள் கூடிவருவார்கள்.

வேதத்தை சரியாகக் கற்றுக்கொள்ளாதவர்களை ஏமாற்றுவது எளிது. அவர்களுக்கு வேத வசனங்களின் உண்மையான அர்த்தங்களைப் புரியவைப்பது மிகவும் கடினம். இப்படிப்பட்டவர்கள் வேத வசனங்களைப் புரட்டும்போது அவர்களுக்குப் புத்திமதி கூறி அவர்களைவிட்டு விலக வேண்டும் என வேதம் கூறுகிறது (தீத்து. 3:10-11). சபையில் உள்ள விசுவாசிகள் கேள்வி கேட்காமல் இருப்பதனால் ஊழியர்கள் தப்பித்து வருகிறார்கள். விசுவாசிகள் வேதத்திலிருந்து ஒவ்வொரு வாரமும் கடினமான கேள்விகளைக் கேட்பார்களாகில் ஊழியர்களில் அநேகர் மாட்டிக்கொள்வார்கள்.

வேதத்தை சரியாகக் கற்றுக்கொள்ளாமல் தவறான விளக்கங்கள், தவறான தரிசனங்கள், தவறான தீர்க்கதரிசனங்கள் போன்றவைகளைச் செய்துவரும் ஊழியர்களை அடையாளம் கண்டு, வேதத்தை சரியாகக் கற்றுத்தரும் ஊழியர்களைப் பின்பற்றுவது நலமான ஒன்று. குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்ட இயலாதே. (மத். 15:14; லூக். 6:39). வேதத்தைப் போதிக்கிறவர்கள் ஜனங்களின் வழிகாட்டியாக

அழைக்கப்படுகிறார்கள். (ரோம. 2:19-20). ஆனால், வேதத்தை சரியாகக் கற்றுக்கொள்ளாமல் உபதேசிப்பவர்களை வேதம் குருடரான வழிகாட்டிகள் என அழைக்கிறது (மத். 23:16-17,19,24,26).

தேவனுடைய அழைப்பைப் பெற்று ஊழியனாக மாறின பின்பு வேதத்தை சரியாகக் கற்றுக்கொள்வது அவசியமான ஒன்று. பேதுரு அப்போஸ்தலர்களில் பெரியவன். ஆனால், பவுல் எழுதினவைகளைப் பேதுருவாலும் புரிந்துக்கொள்ள இயலவில்லை (2 பேது. 3:15-16). பேதுருவும் பரிசுத்தஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றவன்தான். ஆனால், பரிசுத்தஆவியானவரின் அபிஷேகம் தனக்குள் இருப்பதனால் எல்லாமே தனக்குத் தெரியும் என்ற மேட்டிமையான எண்ணங்கொள்ளாமல் தனது தாழ்மையை "அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது" எனக் கூறி வெளிப்படுத்தினான். எவ்வளவு பெரிய அப்போஸ்தலனின் தாழ்மை இது?

பேதுரு இயேசுவுடன் நடந்த பெரிய ஊழியன்தான். ஆனால், இரு நிருபங்களை மட்டுமே எழுதியுள்ளான். இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு அவன் மீனவனாக இருந்தவன். வேதத்தை சரியாக அவன் கற்றிருக்கவில்லை. ஆனால், பவுல் இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பும் கமாலியேலின் பாதத்தில் அமர்ந்து மோசேயின் நியாயப்பிரமாணங்களைக் கற்றவன் (அப். 22:3). இயேசுவை ஏற்றுக்கொண்ட பின்பும் தனிமையில் கற்றுக்கொண்டவன் (கலா. 1:16-17). விருத்தசேதனத்தைக் குறித்ததான தர்க்கம் உண்டானபோது, பவுல் மற்ற அப்போஸ்தலர்களிடம் சென்று ஆலோசனைப்பண்ணி கற்றுக்கொண்டான் (அப். 15:1-2).

பவுலின் இப்படிப்பட்ட செயல்கள் அநேக நிருபங்களை எழுதும்படி உதவியாக இருந்தது. அப்போஸ்தலர்கள் எல்லாரையும்விட அதிகமான நிருபங்களையும் ஆழமான

சத்தியங்களையும் பவுல் எழுதினான். வேதத்தைக் கற்றுக்கொள்பவர்களை தேவன் பயன்படுத்துவார். வேதத்தைக் கற்றுக்கொள்ளாதவர்கள் விளம்பரங்கள் மூலமாகத் தங்களைத் தாங்களே பயன்படுத்துவார்கள். “வேதாகமங்களில் வல்லுனன்” என அழைக்கப்பட்ட அப்பொல்லோ என்பவன் சாதாரண விசுவாசிகளாகிய ஆக்கில்லா பிரிஸ்கில்லா என்பவர்கள் மூலமாக சத்தியத்தை அறிந்துகொண்டான் (அப். 19:24-26).

வேதத்தை சரியாகக் கற்றுக்கொள்வது மிகவும் அவசியமான ஒன்று. வேதத்தைக் கற்போம், சரியானபடி போதிப்போம், வாழ்வோம். ஆமென்.

* * *

முடிவுரை

இந்நூலை கவனமாக வாசித்து மூன்று விதமான உபதேசங்களை அடையாளம் கண்டிருப்பீர்கள் என கர்த்தருக்குள் நம்புகிறேன். உபதேசங்களை அடையாளம் கண்டு கிறிஸ்துவின் உபதேசத்தை மட்டும் பற்றிக்கொள்வது ஒவ்வொரு விசுவாசியினுடைய பொறுப்பாகும். (2 தீமோ. 3:14a). வேதத்தை வாசிக்காமலும், ஆரோக்கியமான உபதேசங்களுக்கு செவிசாய்க்காமலும் இருப்பவர்கள் தவறான உபதேசத்திலிருந்தும் தவறான ஊழியர்களிடமிருந்தும் தப்புவது கடினமான ஒன்று, மட்டுமல்லாது தேவனையும் அவரது சித்தத்தையும் அறிய இயலாது. இதனால் மற்ற மனிதர்களிடம் சென்று தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளலாம் என எண்ணி வஞ்சிக்கப்பட வாய்ப்பு உள்ளது. ஆகவே, வேதத்தை தியானியுங்கள். தவறான உபதேசங்களை அடையாளம் காணுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்,

சாலமோன்

* * *

ஆசிரியரின் இதர நூல்கள்

- பிரசங்கி விளக்கவுரை
- கலாத்தியர் விளக்கவுரை
- எபிரெயர் விளக்கவுரை
- இரண்டாம் வருகையும் அடையாளங்களும்
- அந்திக்கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும்
- ஏழு சபைகள்
- ஏழு முத்திரைகள்
- ஏழு எக்காளங்கள்
- எகிப்தில் பத்து வாதைகள் எதற்காக

3 விதமான உபதேசங்கள்



இந்த புத்தக ஆசிரியரான சகோதரர் சாலமோன் அவர்கள் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். தன்னுடைய 21-வது வயதிலேயே இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர். இயேசு கிறிஸ்துவின் ஊழிய அழைப்பிற்கு கீழ்ப்படிந்து தன்னை முழுநேர ஊழியத்திற்காக அர்ப்பணித்தவர்.

தேவனுடைய ஊழியத்தைப் பல இடங்களில் செய்துகொண்டு வருகிறவர். தேவனுடைய சத்திய வசனத்தைப் போதிக்கின்ற வரம்பெற்றவர். ஒவ்வொரு வேத வசனங்களையும் மக்கள் எளிதாக புரிந்து கொள்ளக்கூடிய வகையில் போதிக்கின்ற வரத்தை பெற்றவர்.

ஒவ்வொரு நாளும் குறைந்தது 8 மணி நேரமாவது வேத வசனங்களை தியானித்துக் கொண்டிருப்பவர். ஊழிய பாதையில் பலவிதமான இன்னல்களை சந்தித்து வருகிற இவர் தன்னுடைய விசுவாசத்தில் மிகவும் உறுதியாகவும், தேவனுடைய சத்தியத்தில் மிகவும் வைராக்கியமுள்ளவராகவும் இருப்பவர். இவருடைய மனைவி ஸ்மிதா சாலமோன் மனநிலை பாதிக்கப்பட்டவர். 13.4.2011 அன்று காத்தருக்குள் நித்திரையடைந்தார்.

கொலோ. 1:9-10, எபி. 5:12-14 வசனங்களின்படி ஒவ்வொரு விசுவாசியும் தேவனுடைய ஊழியகாரர்களைப்போல வேத வசனங்களில் தேறினவர்களாக இருக்கவேண்டும் என்பதே சகோதரர் சாலமோனுடைய தரிசனமாகும். இந்த தரிசனத்தை சுமந்து கொண்டு பல இடங்களில் வேதவசனங்களை போதித்து வருகிறார்.

ISBN 81-937504-0-3

9 788193 750407

Price Rs.40.00

WORD OF CHRIST WOC

Chennai, India